Registered as a news paper.

பக்கங்கள்: பன்னிரண்டு

விலை ரூபா 7.00

நமது

# ஈழநாடு

தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்




மலர்: 03 திருவள்ளுவர் ஆண்டு : 2035 புரட்டாதி 25 ஆம் நாள் ஹிஜ்ரி 1427 ஷஃபான் 25 (11.10.2004) திங்கட்கிழமை இதழ்: 11

## உணர்வெழுச்சியுடன் நடைபெற்ற மாலதி நினைவுநாள் நிகழ்வுகள்!

(யாழ்ப்பாணம்)

2 ஆம் லெப் மாலதியின் 17 ஆவது ஆண்டு நினைவு நாள் நிகழ்வும் தமிழீழ பெண்கள் எழுச்சி நாள் நிகழ்வும் நேற்று கோப்பாயில் உணர்வெழுச்சியுடன் நடைபெற்றன.

கைதடி வீதியில் அமைந்துள்ள மாலதியின் நினைவாலயத்தில் ஆயிரக்கணக்கான மக்கள் ஒன்றுகூடி மாலை 5.30 மணியளவில் நிகழ்வுகள் ஆரம்பமாகின.

ஆரம்பநிகழ்வாக நினைவாலயத்தில் பொதுச்சுடரை மாலதியின் தந்தை பேதுருப்பிள்ளை ஏற்றிவைத்தார். மாலதியின் திருவுருவப்படத்துககான மலர்மாலையை வடமராட்சி கடற்புலிகளின் அரசியற்துறைப் பொறுப்பாளர் கல்யாணி, நாடாளுமன்ற உறுப்பினர் சிவநேசன் ஆகியோர் அணிவித்தனர்.

இதனைத் தொடர்ந்து மாலதியின் திருவுருவப் படத்தைத் தாங்கியவாறு பாடசாலை மாணவர்களின் பாண்ட் வாத்திய இசையுடன் வந்த ஊர்வலம் கோப்பாய் கந்தசுவாமி கோவில் முன்றலை அடைந்தது.

பின்னர் அங்கு அரங்க நிகழ்வுகள் ஆரம்பமாகின.

இந்த நிகழ்வில், பொதுச்சுடரை யாழ். மாவட்ட பொருண்மிய மேம்பாட்டு நிறுவனப் பொறுப்பாளர் தேவா ஏற்றிவைத்தார். தேசியக் கொடியை யாழ். மாவட்ட மகளிர் அரசியற்துறைப் பொறுப்பாளர் கலைவிழி ஏற்றிவைத்தார்.

மாலதியின் திருவுருவப் படத்துக்கான ஈகச்சுடரை மேஜர் சோதியாவின் தாயார் ஏற்றிவைத்தார். திருவுரு

(12 ஆம் பக்கம் பார்க்க)



# புலிகள் முன்வைத்த யோசனைப்படி பேச்சை உடன் ஆரம்பிக்கவேண்டும்!

### சூழ்நிலைக்கேற்ப ராணுவத்தை மேலும் பலப்படுத்த வேண்டும்!

சாந்த கொட்டேகொட தெரிவிப்பு

(கொழும்பு)

மாறுபடும் யுத்த சூழ்நிலைகளுக்கேற்ப இராணுவம் மென்மேலும் தன்னைப் பலப்படுத்திக்கொள்ள வேண்டியது அவசியமாகும். இதற்கான பயிற்சிகளைத் தொடர்ந்தும்

## ஜனாதிபதி சந்திரிகாவுக்கு ரணில் கடிதம்

(கொழும்பு)

**புலிகளால் முன்வைக்கப்பட்டுள்ள இடைக்கால நிர்வாக ஆலோசனைகளைக் கவனத்திலெடுத்து உடனடியாக பேச்சுக்களை ஆரம்பிக்கவேண்டுமென ஜனாதிபதி சந்திரிகாவிடம் எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க கடிதம் மூலம் கோரிக்கை விடுத்துள்ளார்.**



## சூழ்நிலைக்கேற்ப ராணுவத்தை மேலும் பலப்படுத்த வேண்டும்!

### சாந்த கொட்டேகொட தெரிவிப்பு

(கொழும்பு)

மாறுபடும் யுத்த சூழ்நிலைகளுக்கேற்ப இராணுவம் மென்மேலும் தன்னைப் பலப் படுத்திக்கொள்ள வேண்டியது அவசியமாகும். இதற்கான பயிற்சிகளைத் தொடர்ந்தும் மேற்கொள்ள வேண்டும் என இராணுவத் தளபதி லெப்ஜெனரல் சாந்த கொட்டேகொட தெரிவித்தார்.

இலங்கை இராணுவத்தின் 55 ஆவது வருட நிறைவு தினம் நேற்றுக் கொழும்பு இராணுவத் தலைமையகத்தில் இடம்பெற்றது.

(12 ஆம் பக்கம் பார்க்க)

# ஜனாதிபதி சந்திரிகாவுக்கு ரணில் கடிதம்

(கொழும்பு)

**புலிகளால் முன்வைக்கப்பட்டுள்ள இடைக்கால நிர்வாக ஆலோசனைகளைக் கவனத்திலெடுத்து உடனடியாக பேச்சுக்களை ஆரம்பிக்கவேண்டுமென ஜனாதிபதி சந்திரிகாவிடம் எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க கடிதம் மூலம் கோரிக்கை விடுத்துள்ளார்.**



சமாதானத்துக்கான தேசிய ஆலோசனைசபையில் அங்கம் வகிப்பது தொடர்பாக மீண்டும் ஒரு முறை பரிசீலனை செய்யுமாறு, ஜனாதிபதி சந்திரிகா அண்மையில் ரணில் விக்கிரமசிங்கவுக்கு எழுதிய கடிதத்திற்கு பதிலளிக்கும் வகையிலேயே - அவர் இந்தக் கடிதத்தை அனுப்பியுள்ளார்.

அவரது இந்தக் கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது -

ஒஸ்லோவிலும் ரோக்கியோவிலும் நடைபெற்ற பேச்சுவார்த்தைகளின் அடிப்படையில் விடுதலைப் புலிகளுடன் பேச்சுக்களை ஆரம்பிப்பதற்கு நாம் பூரண ஆதரவு வழங்குவோம்.

ஏற்கனவே இலங்கை அரசாங்கம் என்ற வகையில் ஐக்கிய தேசியக் கட்சி தலைமையிலான அரசாங்கம் தனது ஆலோசனையை விடுதலைப் புலிகளிடம் சமர்ப்பித்தது. (12 ஆம் பக்கம் பார்க்க)

# மாலதியின் உருவச்சிலை இரணைமடுவில் திறப்பு!

(கிளிநொச்சி)

தமிழீழ மகளிர் எழுச்சி தினமான நேற்று விடுதலைப் புலிகளின் முதலாவது பெண் மாவீரரான 2 ஆம் லெப்டினன்ட் மாலதியின் உருவச்சிலை கிளிநொச்சி இரணைமடுச் சந்தியில் நேற்று திறந்து வைக்கப்பட்டது.

நேற்றுக்காலை 10 மணியளவில் இடம் பெற்ற இந்த நிகழ்வுக்கு தமிழீழ மாவீரர் பணிமனை துணைப்பொறுப்பாளர் அர்ச்சனா தலைமை வகித்தார்.

பொதுச்சுடரை தமிழீழ மாவீரர் பணிமனைப்பொறுப்பாளர் பொன் தியாகமும், மூன்று மாவீரர்களின் தாயாரான திருமதி பொன்தியாகமும் ஏற்றிவைத்தனர்.

உருவச்சிலைக்கான பெயர் கல் வெட்டை வடபோர்முனைக் கட்டளைத் தளபதி கேணல் தீபன் திரைநீக்கம் செய்து வைத்தார். உருவச்சிலையை மாலதி படையணியின் சிறப்புத் தளபதி கேணல் விதுசா திரைநீக்கம் செய்து வைத்தார்.

மாலதியின் தந்தையாரான பேதுரு ஈகச் சுடரேற்றி உருவச்சிலைக்கு மலர்மாலை அணிவித்தார் மாலதியின் சகோதரி தொம்

(12 ஆம் பக்கம் பார்க்க)



# பலாலி ஓடுபாதை புனரமைப்பு; அமெரிக்கா, இந்தியா ‘அவுட்’!

## உள்ளூர் நிறுவனத்துக்கே வாய்ப்பு

(கொழும்பு)

பலாலி விமானதளத்தின் ஓடுபாதைகளைப் புனரமைப்பதற்காக இந்தியா மற்றும் அமெரிக்கா ஆகிய நாடுகள் விடுத்த கோரிக்கைகளை புறக்கணித்துவிட்டு - உள்ளூர் நிறுவனம் மூலம் புனரமைப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ள அரசாங்கம் முடிவு செய்துள்ளது.

பலாலி விமானத்தளத்தின் ஓடு பாதையை புனரமைப்புச் செய்வதற்கு இந்தியாவும், அமெரிக்காவும் தமது சொந்தச் செலவில் பணிகளை மேற்கொள்ள விருப்பம் தெரிவித்திருந்தன.

இந்த விமான ஓடுபாதையை தமது நாட்டின் அனுமதியுடன்தான் பயன்படுத்த வேண்டும் என்று இந்த நாடுகளும் நிபந்தனையும் விதித்திருந்தன.

எனினும் இந்தப் புனரமைப்புத் திட்டத்தை அரசாங்கம் இந்தியாவிடம் வழங்குவதற்கு இணக்கம் தெரிவித்திருந்தது. ஆயினும் திடீரென இந்தத் திட்டம் கைவிடப்பட்டிருக்கிறது.

உள்ளூர் நிறுவனமான சி.ஈ.சி.பி என்ற நிறுவனத்திடம் விமான ஓடுபாதைப் புனரமைப்பை மேற்கொள்ளும் பொறுப்புக் கையளிக்கப்பட்டிருக்கிறது.

360 மில்லியன் பெறுமதியான இந்தத் திட்டத்தை நிறைவேற்றுவதற்கான பொறுப்பை

(12 ஆம் பக்கம் பார்க்க)

## ஜே.வி.பியினருடன் எவ்வித கருத்துவேறுபாடும் இல்லை!

### ஜனாதிபதி சந்திரிகா கூறுகிறார்!

(கொழும்பு)

ஜே.வி.பிக்கும் எனக்கும் இடையில் கருத்துவேறுபாடுகள் இருப்பதாக தனியார் ஊடகங்களில் வெளியிடப்பட்ட செய்திகள், உண்மைக்குப் புறம்பானவை என்று ஜனாதிபதி சந்திரிகா தெரிவித்தார்.

'ஜனன' என்ற திட்டத்தின் கீழ் காணி உரிமைக்கான உறுதிகள் வழங்கும் வைபவம் நேற்று வியாங்கொடையில் நடைபெற்ற

(12 ஆம் பக்கம் பார்க்க)





இலங்கையில் முன்னணி வகிக்கும் உள்ளூர் விமான சேவை...

ஒதுக்கீடுகளுக்கு அழையுங்கள் 021-2223891, 2226297, 077-2349999, 011-2372952-3, 011-2360290, 011-2360291

email: jaffna@expoavi.com, reservations@expoavi.com

EXPOAIR

Your friend in the skies...

# போக்குவரத்து நேரம் மட்டுப்படுத்தப்பட்டதால் வர்த்தக நடவடிக்கைகள் பாதிப்படைந்துள்ளன

## ஐக்கிய வியாபாரிகள் சங்கம் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

ஏ9 வீதி ஊடான போக்குவரத்து சேவை மட்டுப்படுத்தப்பட்டுள்ளதால் தமது சந்தைப்படுத்தல் வாய்ப்பு பாதிப்படைந்துள்ளதாக ஐக்கிய வியாபாரிகள் சங்கம் தெரிவித்துள்ளது.

இது குறித்து மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது.

முகமாலை, புளியங்குளம் இராணுவசோதனைச்சாவடிகள் மட்டும் திறந்திருப்பதுடன், பயணம் செய்வதற்கான நேரமும் மட்டுப்படுத்தப்பட்டுள்ளது.

இதனால், பழங்கள், கடல் உணவுகள் என்பன, உரிய நேரத்திற்கு தென்னிலங்கைக்கு எடுத்துச்செல்ல முடியாமல் இருப்பதால், அவை விரைவாக பழுதடைகின்றன. இதனால் தினமும் வியாபாரிகள் நட்டங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

இந்நிலையில் ஏ-9 வீதியை திறக்கும் நேரத்தை அதிகரித்து வியாபாரிகளின் வர்த்தக நடவடிக்கைகளுக்கு உதவவேண்டும் என கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

மேற்படி கோரிக்கைகள் அடங்கிய கடிதம் யாழ்.அரசஅதிபர், சர்வதேச செஞ்சிலுவைச்சங்கம் ஆகியோருக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.

## கலாநிதி வீரமணி ஐயரின் நினைவு நாள் நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

முத்தமிழ் கலாநிதி வீரமணி ஐயரின் நினைவுநாள் நிகழ்வு நாளை மாலை 4 மணிக்கு யாழ். தேசிய கல்வியியற் கல்லூரியில் நடைபெறவுள்ளது.


நாகம்ஸ் சுன்னாகம்

இலங்கையிலும் - இந்தியாவிலும் ஒரேதின வெளியீடான ஸ்ரீகாந்த் சினேகா கபாலி மற்றும் நாகேஷ் நடித்த



போஸ் (ரீலீஸ்)

காட்சி நேரம்:11.00,3.00,7.00,10.00 (பு.நே)

ராஜா யாழ்ப்பாணம்.

சில தினங்கள் மட்டும் தனுஷ், சாயாசிங் நடித்த

திருடா திருடி



காட்சி நேரம் 10.30, 2.30, 6.30, 9.30

(சி-2725)


## சிறு விளம்பரம்


### முகமதி கிறைண்டிங் மில்

ரோஸ், ரசம், நன்னாரி ரசம், நெல்லி ரசம், கிறேப் சர்பத் , பஷன் ரசம், தேசிக்காய் ரசம் ஆகியவற்றை மொத்தமாகவும், சில்லறையாகவும் பெற்றுக்கொள்ள முகமதி கிறைண்டிங் மில்ஸ் அன் ஸ்ரோர்ஸ். இல : 777, கே.கே.எஸ் வீதி, யாழ்ப்பாணம்.

(C/3022)

### புறொயிலர் விற்பனை

தீபாவளிப் பண்டிகையை முன்னிட்டு அதிரடி விலையில் புறொயிலர் கோழிகளை மொத்தமாகவும், சில்லறையாகவும் பெற்றுக்கொள்ளலாம். சுத்தம்செய்து தரப்படும். தொடர்பு: நாகம்ஸ் பாம், வட்டு இந்துக் கல்லூரி அருகாமை, சித்தன்கேணி. T.P. 077- 6331518

### மரக்கன்றுகள் விற்பனை

சகலவிதமான பூக்கன்றுகளும் மற்றும் கனமரக் கன்றுகளும் விற்பனைக்குண்டு. தொடர்பு:-நாகம்ஸ் பாம் வட்டு இந்துக் கல்லூரி அருகாமை சித்தன்கேணி.

T.P.077 - 6331518 (சி-3225)

நிரஞ்சனாஸ் சங்கானை



விஜய், சோனியா அகர்வால் நடித்த

மதுர

(சி-2723)

தினசரி காட்சிகள் : 11.00, 2.45, 6.00 (பு.நே)


# புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தி!



(யாழ்ப்பாணம்)

இந்த வருடம் நடைபெற்ற ஐந்தாம் தர புலமைப்பரிசில் பரீட்சையில் யாழ்.கந்தர்மடம் சைவப்பிரகாச வித்தியாலய மாணவி .த.சோபிகா 135 புள்ளிகளைப் பெற்றுச் சித்தியடைந்துள்ளார்.

இந்தப் பாடசாலையின் வரலாற்றில் முதன் முதலாகச் சித்திபெற்ற மாணவி இவரென்பது குறிப்பிடத்தக்கது.


## தேசிய மட்டத்தில் தங்கப் பதக்கம் பெற்ற

### யாழ்.கனகரத்தினம் மத்திய மகாவித்தியாலய மாணவி



### செல்வி தர்சினி குணரத்தினம்

அவர்களுக்கான

**பாராட்டு வைபவம்**

காலம்: 12.10.2004 செவ்வாய் பி.ப.12.30

**தலைமை:**

அதிபர் திரு.வி.மாணிக்கம்

**வாழ்த்துரைகள்**

திரு.செ.பத்மநாதன் (அரச அதிபர், யாழ்.மாவட்டம்)
கலாநிதி சு.மோகனதாஸ் (துணைவேந்தர், யாழ்.பல்கலைக்கழகம்)
திரு.ப.விக்னேஸ்வரன் (கல்விப் பணிப்பாளர், யாழ். கல்வி வலயம்)
திரு.சி.இளம்பரிதி (பொறுப்பாளர், அரசியற்துறை, யாழ்.மாவட்டம்)
திரு.த.அருணகிரிராஜா (உதவிக் கல்விப் பணிப்பாளர், உடற்கல்வி)
திரு.சி.வி.கே.சிவஞானம் (தலைவர், பழைய மாணவர் சங்கம்)
திருமதி ச.காங்கேயன் (கோட்டக் கல்விப் பணிப்பாளர், நல்லூர்)

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.
அதிபர், ஆசிரியர், மாணவர்கள்,
பாடசாலை அபிவிருத்திச் சங்கம், பழைய மாணவர் சங்கம் (சி-3254)


# 2 ஆம் லெப்ரினன்ட் மாலதியின் நினைவு நாள் நிகழ்விலிருந்து....

## கோப்பாயில் நடைபெற்ற லெப். மாலதியின் நினைவுநாள் நிகழ்வுகள்...














## இரணைமடுவில் நடைபெற்ற லெப்.மாலதியின் உருவச்சிலை திறப்புவிழா...







# கருணா குழுவினராலேயே இரு முஸ்லிம்களும் கொலை!

## கிராம மக்கள் ஹக்கீமிடம் தெரிவிப்பு

(கொழும்பு)

பொலனறுவ - வெலிக்கந்த பிரதேசத்தில் இடம்பெற்ற இரண்டு முஸ்லிம்களின் கொலை தொடர்பாக ஆராயும் நோக்கில் - சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவர் ரவூப் ஹக்கீம் நேற்று விஜயம் ஒன்றை மேற்கொண்டார்.

இதன்போது அவர் முஸ்லிம்கள் இருவர் கொல்லப்பட்ட அத்துன்கல கிராமத்துக்கும் சென்று மக்களுடன் கலந்துரையாடினார். அத்துடன், முஸ்லிம்களின் கிராமங்களான கட்டுவன் வில, சேனபுர ஆகிய கிராமங்களுக்கும் விஜயம் செய்தார்.

இதன்போது, அண்மைக்காலமாக தமது பிரதேசத்தில் புதியவர்களின் நடமாட்டம் காரணமாகப் பாதுகாப்பு அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளதாக மக்கள் தெரிவித்தனர்.

கருணா குழுவினாலேயே தமது கிராமத்தைச் சேர்ந்த இருவரும் கொல்லப்பட்டிருக்கலாம் என்ற சந்தேகத்தையும் அவர்கள் வெளியிட்டனர்.

இவர்கள் கால்நடை வளர்ப்பு தொழிலில் ஈடுபட்டுவரும் தம்மிடம், கப்பம் கோரி வருவதாகவும், இதனை இராணுவத்தினர் கண்டு கொள்வதில்லை என்றும் கிராமமக்கள் முறையிட்டனர்

அதேநேரம் இராணுவத்தரப்பு குறிப்பிட்ட ஆயுதக்குழுவுக்கு பாதுகாப்பை வழங்கி வருவதாகவும் மக்கள் தெரிவித்தனர். (01)

# சட்டவிரோத மதுபான விற்பனையாளர் பொலிஸாரின் தாக்குதலில் உயிரிழப்பு!

புத்தளம் பகுதியில் மதுபான விற்பனையாளர் ஒருவர் நேற்றுமுன்தினம் பொலிஸாரால் சுட்டுக்கொல்லப்பட்டார். நேற்றுமுன்தினம் காலை 5.30 மணியளவில் இந்தச் சம்பவம் புத்தளம் - நிந்தணிப் பகுதியில் இடம்பெற்றது.

36 வயதுடைய விஜயபால என்பவரே பொலிஸாரின் தாக்குதலின் போது உயிரிழந்தவரெனத் தெரிவிக்கப்படுகிறது.

சட்டவிரோத மதுபான விற்பனை தொடர்பான தகவலை அடுத்து, பொலிஸார் சுற்றி வளைப்புத் தேடுதல் ஒன்றை இந்தப்பகுதியில் நேற்றுமுன்தினம் காலை நடத்தினர்.

இந்தத் தேடுதலின்போது சட்ட விரோத மதுபான விற்பனையில் ஈடுபட்டுவந்த ஒருவரின் இருப்பிடம் பொலிஸாரால் அடையாளம் காணப்பட்டது.

குறிப்பிட்ட விற்பனையாளரைப் பொலிஸார் கைதுசெய்ய முயற்சித்தபோது, அவர் பொலிஸார் மீது துப்பாக்கிப் பிரயோகம் செய்ய முயற்சித்ததாகவும், இதனையடுத்து பொலிஸார் அவர்மீது துப்பாக்கிப்பிரயோகம் மேற்கொண்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இந்தத் தாக்குதலில் படுகாயமடைந்த மதுபான விற்பனையாளரை உடனடியாக சிலாபம் மருத்துவமனைக்கு கொண்டுசென்ற போதும் வழியிலேயே அவர் உயிரிழந்தார்.

இவர் மீது தாக்குதல் நடத்திய பொலிஸ உத்தியோகத்தர், பொலிஸ் நிலையத்தில் தடுத்துவைக்கப்பட்டுள்ளதாக பொலிஸ் அத்தியட்சகர் வெலகொடபொல தெரிவித்தார்.(10)

## உத்தியோகபூர்வ இல்லத்திலிருந்து

# முன்னாள் அமைச்சரை வெளியேற்றுமாறு கொழும்பு நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல்!

(கொழும்பு)

உத்தியோகபூர்வ வாசஸ்தலத்திலிருந்து இதுவரை வெளியேறாத முன்னாள் நீர்ப்பாசனத்துறை அமைச்சர் எச்.ஜி.பி.நெல்சன் (பொலன்னறுவை மாவட்டம்), முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ஏ.ஏ.விஜயதுங்க (இரத்தினபுரி மாவட்டம்) ஆகியோருக்கு எதிராக, கொழும்பு பிரதமநீதிவான் நீதிமன்றில் வழக்குத்தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

இந்த வழக்கைப் பொதுநிர்வாக மறுசீரமைப்பு அமைச்சின் செயலாளர் தாக்கல் செய்துள்ளார்.

குறிப்பிட்ட பிரதிவாதிகள் பதவியில் இல்லாதபோதிலும் தொடர்ந்தும் அரசாங்க உத்தியோகபூர்வ வாசஸ்தலத்தை பயன்படுத்திவருவதால் இவர்களை அங்கிருந்து வெளியேறுமாறு நீதிமன்றம் உத்தரவிடவேண்டும் என்று மனுதாரர் நீதிமன்றத்தைக் கேட்டுள்ளார்.

இந்த மனுவை ஏற்றுக்கொண்ட நீதிமன்றம், இரண்டு பிரதிவாதிகளையும் எதிர்வரும் டிசெம்பர் மாதம் 3 ஆம் திகதி நீதிமன்றத்தில் ஆஜராகுமாறு நேற்றுமுன்தினம் உத்தரவிட்டது.

இதேவேளை- முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்களான பாரத லக்ஸ்மன், பிரேமச்சந்திர (கொழும்பு), சிட்னி ஜெயரத்ன (பொலன்னறுவ), டி.எம். பண்டாரநாயக்க (குருநாகல்), அஜித் குமார பத்தேகம (இரத்தினபுரி), நீல் ரூபசிங்க (கம்பஹா) ஆகியோருக்கு எதிராகவும் இப்படியான வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டுள்ளபோதிலும் அவர்கள் அங்கிருந்து வெளியேறியதை அடுத்து அந்த வழக்குகள் வாபஸ் பெறப்பட்டன. (01)

## கட்சியிலிருந்து நீக்கியதாக

# வெளியான செய்திகளை சம்பிக்க ரணவக்க மறுக்கிறார்

(கொழும்பு)

ஜாதிக ஹெல உறுமய கட்சியிலிருந்து தாம் உத்தியோகபூர்வமாக விலக்கப்பட்டதாக வெளிவந்த செய்தியை சம்பிக்க ரணவக்க மறுததுள்ளார்.

இந்தக்கட்சியின் செயலாளர் பதவியிலிருந்து சம்பிக்க ரணவக்க நீக்கப்பட்டிருப்பதாக ஜாதிக ஹெல உறுமயவின் பொதுச் செயலாளர் உடுவே தம்மாலோக தேரர் நேற்று முன்தினம் அறிவித்திருந்தார்.

அத்துடன், இந்தமுடிவு குறித்து தேர்தல் ஆணையாளருக்கும் அறிவிக்கப்பட்டுள்ளதாக குறிப்பிட்ட அவர், கட்சியின் மத்திய குழு மறு அறிவித்தல் வரை செயற்படாது என்றும் தெரிவித்திருந்தார்.

இந்தநிலையில், இந்தச் செய்தியை மறுத்திருக்கும் சம்பிக்க ரணவக்க, கட்சியின் மத்திய குழு தம்மை நீக்குவது குறித்த எந்தவொரு முடிவையும் எடுக்கவில்லை. இன்று கூடவுள்ள மத்திய குழுவின் அனுமதியின்றி இத்தகைய முடிவெதனையும் எடுக்கமுடியாது.

இதேவேளை, தமது நாடாளுமன்ற உறுப்புரிமையை இராஜினாமாச் செய்திருக்கும் ஜாதிக ஹெல உறுமயவைச் சேர்ந்த கொலன்னாவ சுமங்கல தேரர், கட்சியின் தேசிய அமைப்பாளராகத் தான் தொடர்ந்தும் செயற்படவிருப்பதாக அறிவித்துள்ளார்.

நாடாளுமன்றத்தில் செலவிடும் நேரம் வீணானது என்று கருதியதாலேயே தான் நாடாளுமன்ற உறுப்பினர் பதவியை இராஜினாமாச் செய்திருப்பதாகவும் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார். (01)

# தெற்கில் தங்கியுள்ள புலிகளின் விபரங்களைத் திரட்ட நடவடிக்கை

விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதியிலிருந்து தென்பகுதிக்கு வந்துள்ள தமிழீழ விடுதலைப்புலிகளினதும், அவர்களுக்கு உதவி வழங்கும் வர்த்தகர்களினதும் விபரங்களைத் திரட்ட பாதுகாப்பு அமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளது.

தமிழீழ விடுதலைப்புலிகளின் அங்கத்தவர்கள் தொடர்பான விபரங்களைத் திரட்டும் நடவடிக்கை கடந்த மூன்று வருடங்களாக இராணுவத்தினரால் இடைநிறுத்தப்பட்டிருந்தது.

இதன்படி தெஹிவளை, பம்பலப்பிட்டி, வெள்ளவத்தை, கிராண்ட்பாஸ், மட்டக்குளி, கொட்டாஞ்சேனை, மருதானை உட்பட கொழும்பை அண்டியுள்ள அனைத்துப் பிரதேசங்களிலும் இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்படவுள்ளது.

இது குறித்து பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் கருத்து வெளியிடுகையில் -

பாதுகாப்பு அமைச்சின் மூலம் இந்த செயற்பாடு கடந்த சில காலங்களில் முன்னெடுக்கப்படவில்லை.

இதனால், பாதுகாப்பு அமைச்சின் கீழ் செயற்படும் ஐந்து உளவுப் பிரிவுகளின் மூலம் இந்த விபரம் திரட்டும் நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது. (தே)

## நான்குபேருக்கு பிரதி அமைச்சர் பதவிகள்

அரசாங்கக்கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் நால்வருக்கு பிரதி அமைச்சர் பதவிகள் வழங்கப்படவுள்ளதாக ஜனாதிபதி செயலகத் தகவல்கள் தெரிவித்தன.

அனுராதபுர மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.எம்.சந்திரசேன, புத்தளம் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் டி.எம்.தஸநாயக்க, நியமன உறுப்பினர் மேவின் சில்வா மற்றும் குசைன் அகமட்பைலா ஆகியோருக்கே பிரதி அமைச்சர் பதவிகள் வழங்கப்படவுள்ளன.

இவர்களில் மேவின் சில்வா சந்திரசேன ஆகியோர் பிரதி அமைச்சர்களாக இன்றும் நாளையும் ஜனாதிபதி முன்னிலையில் பதவிப்பிரமாணம் செய்யவுள்ளனர். (தே)

# முன்னாள் பொலிஸ்மா அதிபரின் இடமாற்ற சிபார்சுகள் இரத்து!

முன்னாள் பொலிஸ்மா அதிபர் இந்திர டி சில்வாவினால் சிபார்சு செய்யப்பட்டிருந்த பொலிஸ் அதிகாரிகளின் இடமாற்றத்தை ரத்துச் செய்திருப்பதாகத் தேசிய பொலிஸ் ஆணைக்குழு தெரிவித்திருக்கிறது.

புதிய பொலிஸ் மா அதிபரின் சிபார்சுகளை இதற்கெனப் பெற்றுக்கொள்ள உத்தேசித்திருப்பதாக இந்தக் குழுவின் தலைவர் ரஞ்சித் அபயசூரிய தெரிவித்தார்.

இது தொடர்பாக புதிய பொலிஸ் மா அதிபர் சந்திரா பெர்னாண்டோவுடன் கலந்துரையாடப்பட்டுள்ளது.

இதேவேளை - தற்போது வெற்றிடமாக இருக்கின்ற சிரேஷ்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர், பிரதிப் பொலிஸ் மா அதிபர் பதவிகளுக்குத் தகுதியானவர்களை நியமிப்பது தொடர்பாகப் பொலிஸ் ஆணைக்குழு நடவடிக்கை எடுத்து வருகிறது. (01)

# இனப்பிரச்சினை தீர்வு விடயத்தில் கனடிய அரசின் பங்களிப்பு அவசியம்

## நோர்வே அரசு வலியுறுத்து



இலங்கையின் இனப்பிரச்சனை விவகாரத்தில் கனடிய அரசாங்கத்தின் பங்களிபபு மிகவும் அவசியம் என நோர்வேயினால் வலியுறுத்தப்பட்டுள்ளது.

வட அமெரிக்காவுக்கான விஜயம் ஒன்றை மேற்கொண்டிருந்த நோர்வேயின் சமாதானத் தூதுவர் எரிக் சொல்ஹெய்ம் கனடிய நாடாளுமன்ற உறுப்பினர் மரியா மின்னாவை இந்த வாரம் சந்தித்த போது, இதன் அவசியத்தை வலியுறுத்தினார்.

இலங்கை - கனடா நாடாளுமன்ற உறுப்பினர்கள் சபையின் தலைவரான மரியா மின்னாவின் ஒட்டாவா நாடாளுமன்ற அலுவலகத்தில் இந்தச் சந்திப்பு நடைபெற்றது.

இந்தச் சந்திப்பில் - கனடாவுக்கான நோர்வேத் தூதுவர் மற்றும் பீச்சஸ் - ஈஸ்யோர்க் லிபரல் கட்சியின் பிரதேசத் தலைவர் கணேசன் சுகுமார் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

இனப்பிரச்சினை விவகாரத்தில் கனடிய அரசின் பங்களிப்பை விடுதலைப் புலிகளும், இலங்கை அரசாங்கமும் முழுமனதுடன் ஏற்றுக் கொள்ளும் எனவும் தெரிவித்துள்ள எரிக் சொல்ஹெய்ம், கனடிய அரசு தகுந்த உதவிகளை வழங்க முன்வரவேண்டும் எனவும் இந்தச் சந்திப்பின்போது கோரியிருந்தார்

இனப்பிரச்சனைக்குத் தீர்வு காண்பதற்கு கனடா உரிய உதவிகளை வழங்கும் என இந்தச் சந்திப்பின் போது மரியா மின்னா உறுதியளித்துள்ளார்.

இந்த வருடத்தின் இறுதி வாரங்களில் இலங்கைக்கான விஜயம் ஒன்றை மேற்கொள்ளவுள்ளதாகத் தெரிவித்துள்ள அவர், இந்த விஜயத்தின்போது அனைத்துக் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்களையும் தான் அழைத்துச் செல்லத் திட்டமிட்டுள்ளதாகவும் கூறினார்.

# வாகனங்களிடம் வரி அறவிட மாநகரசபை மேயர் எதிர்ப்பு

(கொழும்பு)

கொழும்பு நகருக்குள் வரும் வாகனங்களுக்கு வரியை அறவிடுவதற்கு அனுமதி வழங்கமாட்டோம் என கொழும்பு மாநகரசபையின் பிரதி மேயர் அஸாத் அலி தெரிவித்தார்.

கொழும்பு நகருக்குள் நுழையும் வாகனங்களிடமிருந்து வரியை அறவிடுவதற்கான ஆலோசனை கொழும்பு மாநகர சபையிடமே முதலில் சமர்ப்பிக்கப்பட்டிருந்தது.

இதனை எதிர்வரும் காலத்தில் நடைமுறைப்படுத்துவதற்கு திட்டமிடப்பட்டிருந்தபோதும், மத்திய அரசின் மூலம் அது செயற்படுத்தப்படுவதால், மாநகரசபைக்குக் கிடைக்க வேண்டிய பெருந்தொகை வரிப்பணம் கிடைக்காது போய்விடும்.

மாநகரசபையின் செயற்திட்டங்களை முன்னெடுப்பதற்காக அரச வங்கிகளிடமிருந்து வங்கி மேலதிகப்பற்றினைப் பெறுவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது. (தே)

# போலிச்சான்றிதழ்களை வழங்கிய 'கச்சேரி' கொழும்பில் சிக்கியது!

(கொழும்பு)

போலிச் சான்றிதழ்களை வழங்கியது தொடர்பாக, சந்தேகத்தின் பேரில் கைதுசெய்யப்பட்ட பிரதேசசெயலக ஊழியர் ஒருவர் வழங்கிய தகவலை அடுத்து, மருதானையில் இயங்கிய போலிக்கச்சேரி ஒன்று பொலிஸாரால் கண்டு பிடிக்கப்பட்டுள்ளது.

அத்துடன், இந்தப் போலிக்கச்சேரியுடன் தொடர்புடைய பிரதேச செயலக ஊழியர்கள் ஏழு பேரையும் மருதானைப் பொலிஸார் கைது செய்தனர்.

கம்பஹா, வத்தளை மற்றும் ஜாஎல பகுதிப்பிரதேச செயலகங்களின் ஊழியர்களே கைது செய்யப்பட்டவர்களாவர். மருதானையில் இயங்கிய இந்தப் போலிக்கச்சேரியிலிருந்து விவாகப்பதிவாளர், மேலதிக பதிவாளர், பிரதேச செயலர்கள், பிறப்பு - இறப்புப் பதிவாளர், நிர்வாக அலுவலர், மாவட்டக் காணிப்பதிவாளர் பகுதிகளுக்குரிய போலி இறப்பர் முத்திரைகள் 25, பிறப்புச்சான்றிதழ்கள் 125 என்பன கைப்பற்றப்பட்டுள்ளதாக குற்றவியல் திணைக்களத்தின் உதவிப் பொலிஸ் அதிகாரி மேவின் சில்வா தெரிவித்தார்.

கொழும்பு, தெஹிவளை, கல்கிசை, யாழ்ப்பாணம், கண்டி ஆகியவற்றிலுள்ள பிரதேச செயலகங்களின் உத்தியோகத்தர்களது பெயர்களில் இந்த இறப்பர் முத்திரைகள் தயாரிக்கப்பட்டுள்ளன.

இந்தப் போலிக்கச்சேரி சுமார் 10 வருடங்களாக இயங்கி வந்துள்ளதாக பொலிஸ் விசாரணைகளிலிருந்து தெரியவந்துள்ளது. (தே)

# 217 ஓட்டங்களால் இந்தியா பெங்களூர் டெஸ்ட்டில் தோல்வி!



பெங்களூரில் நடைபெற்ற முதலாவது டெஸ்ட் போட்டியில் இந்திய அணியை 217 ஓட்டங்களால் தோற்கடித்து அவுஸ்ரேலிய அணி வெற்றிபெற்றது.

இரண்டாவது இனிங்ஸில் 457 ஓட்டங்களைப் பெறவேண்டிய கடினமான வெற்றி இலக்குடன் நேற்றுமுன்தினம் ஆட்டத்தைத் தொடங்கிய இந்திய அணி அன்றைய தினமே 6 விக்கெட் இழப்புக்கு 105 ஓட்டங்களை மட்டுமே பெற்று தோல்வியின் விளிம்பில் இருந்தது.

நேற்று ஐந்தாவது நாள் - இந்திய அணி ஆட்டத்தை ஆரம்பித்து சற்று நேரத்திலேயே டிராவிட்டின் விக்கெட்டை இழந்தது.

இரண்டாவது விக்கெட்டுக்காகக் களமிறங்கி, நிலைத்து நின்று ஆடிய டிராவிட், அணி 118 ஓட்டங்களைப் பெற்றிருந்தபோது கஸ்பரோவிச் வீசிய பந்தில் எல்.பி.டபிள்யூ முறையில் ஆட்டமிழந்து சென்றார்.

இவர் 187 பந்துகளில் 11 பவுண்டரிகளுடன் 60 ஓட்டங்களைப் பெற்றுக்கொடுத்தார். இதையடுத்து நேற்று முன்தினம் 7 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்காமல் இருந்த இர்பான் பதானுடன் அனில் கும்ளே ஜோடி சேர்ந்தார்.

ஆனால், அவரும் 2 ஓட்டங்களை மட்டுமே பெற்ற நிலையில் கஸ்பரோவிச்சின் பந்து வீச்சில் போல்டாகி வெளியேறினார்.

இதைத் தொடர்ந்து இந்திய அணியின் இளம் சுழற்பந்து வீச்சாளர் ஹர்பஜன்சிங் களமிறங்கி, இர்பான் பதானுடன் இணைந்து இந்திய அணியை மிகமோசமான நிலையிலிருந்து மீட்க முனைந்தார்.

இரண்டு வீரர்களும் இணைந்து அவுஸ்ரேலிய பந்துவீச்சாளர்களின் பந்துகளை இலாவகமாக அடித்து விளாசினர்.

இருவரும் இணைந்து இந்திய அணிக்கு 99 ஓட்டங்களைப் பெற்றுக்கொடுத்தனர். இவர்கள் இருவரும் இணைந்து சிக்ஸர்கள் பவுண்டரிகளாக விளாசி ரசிகர்களை களிப்பிலாழ்த்தினர்.

எனினும், ஜிலெஸ்பியின் பந்துவீச்சில் கில்கிறிஸ்டிடம் பிடிகொடுத்து இர்பான் பதான் ஆட்டமிழந்தார். இவர் 141 பந்துகளில் 8 பவுண்டரிகள், 2 சிக்ஸர்களுடன் 55 ஓட்டங்களைப் பெற்றார்.

இதையடுத்து சகீர்கான் களமிறங்கி தனது







பங்குக்கு அடித்தாடினார். எனினும் இந்திய அணி 239 ஓட்டங்களை மட்டுமே பெற்றிருந்த நிலையில், ஹர்பஜன்சிங் ஆட்டமிழந்ததால் இந்திய அணி 217 ஓட்டங்களால் தோல்வியடைந்தது.

ஹர்பஜன்சிங் 67 பந்துகளில் 1 சிக்ஸர், 7 பவுண்டரிகளுடன் 42 ஓட்டங்களைப் பெற்றுக் கொடுத்தார். சகீர்கான் 20 பந்துகளில் 4 பவுண்டரிகளுடன் 22 ஓட்டங்களைப் பெற்றுக் கொடுத்தார்.

பந்துவீச்சில் இரண்டாவது இனிங்ஸில் ஜிலெஸ்பி 3, கஸ்பரோவிச், வோர்ன், மக்ரா ஆகியோர் தலா 2 விக்கெட்டுக்களையும் கைப்பற்றினர்.

முதலாவது டெஸ்ட் போட்டியில் ஆட்ட நாயகனாக அவுஸ்ரேலிய அணி வீரர் கிளார்க் தெரிவுசெய்யப்பட்டார்.

இந்த இரு அணிகளுக்குமிடையிலான இரண்டாவது டெஸ்ட் போட்டி சென்னையில் எதிர்வரும் 14 ஆம் திகதி ஆரம்பமாகவுள்ளது குறிப்பிடத்தக்கது.

## ஸ்ரான்லி கல்லூரி சம்பியனானது!

(யாழ்ப்பாணம்)

யாழ்.வலயத்துக்குட்பட்ட நல்லூர்க் கோட்டப் பாடசாலை அணிகளிடையே நடைபெற்று வந்த உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரில் ஸ்ரான்லிக் கல்லூரி சம்பியனாக தெரிவு செய்யப்பட்டது.

யாழ். இந்துக்கல்லூரி அணி இரண்டாம் இடத்தையும், முத்துத்தம்பி மகா வித்தியாலயம் மூன்றாம் இடத்தையும் பெற்றுக்கொண்டன. இந்த மூன்று அணிகளும் யாழ்.வலய மட்ட உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டிக்குத் தகுதிபெற்றுள்ளன. (58)

## யாழ். கோட்ட பாடசாலைகளின் உதைபந்தாட்டப் போட்டிகள்

(யாழ்ப்பாணம்)

யாழ்.வலயப் பாடசாலை அணிகளிடையே நடைபெற்றுவரும் உதைபந்தாட்டப் போட்டித் தொடரில் - யாழ். கோட்டப் பாடசாலை அணிகளிடையே கனகரட்ணம் மத்திய மகா வித்தியாலய மைதானத்தில் நடைபெற்று வரும் போட்டித் தொடரில் இன்று பிற்பகல் 1.30 மணி முதல் 5 போட்டிகள் நடைபெறவுள்ளன.

**14 வயதுப் பிரிவு**
**முதலாம் அரையிறுதியாட்டத்தில்**

யாழ். மத்திய கல்லூரியை எதிர்த்து சென் ஜேம்ஸ் மகா வித்தியாலயம் மோதும் போட்டியும்,

**14 வயதுப் பிரிவு இரண்டாம் அரையிறுதியாட்டத்தில்**

சென் சாள்ஸ் மகா வித்தியாலயத்தை எதிர்த்து யாழ்.நாவாந்துறை றோ.க.வித்தியாலயம் மோதும் போட்டியும் -

**18 வயதுப் பிரிவில்**

யாழ். மத்திய கல்லூரியை எதிர்த்து யாழ்.புனித யோசப் வித்தியாலயம் மோதும் போட்டியும் -

யாழ். புனித பத்திரிசியார் கல்லூரியை எதிர்த்து யாழ். நாவாந்துறை றோ.க.வித்தியாலயம் மோதும் போட்டியும்,

**16 வயதுப் பிரிவில்**

3 ஆம் இடத்தை தெரிவுசெய்வதற்கான போட்டியும் நடைபெறவுள்ளன. (58)




# ஜப்பான் ரெனிஸ் - சரபோவா சம்பியன்



ஜப்பான் ஓபன் ரெனிஸ் போட்டியின் இறுதி ஆட்டத்தில் ரஷ்ய வீராங்கனையான ஷரபோவா, அமெரிக்காவின் மஷோனாவுடன் மோதினார். இதில் ஷரபோவா 6-0, 6-1 என்ற நேர் செட்டில் வெற்றிபெற்று சம்பியன் பட்டம் பெற்றார்.

# உலகக் கிண்ண தகுதிச் சுற்றில் இங்கிலாந்து அணிக்கு வெற்றி!

(லண்டன்)

உலகக் கிண்ண தகுதிச் சுற்று உதைபந்தாட்டப் போட்டியில் இங்கிலாந்து அணி 2:0 என்ற கோல் அடிப்படையில் வேல்ஸ் அணியைத் தோற்கடித்தது.

உலகக் கிண்ணத் தகுதிச் சுற்று ஆட்டங்கள் கடந்த சனிக்கிழமை ஆரம்பமாகி நடைபெற்று வருகின்றன.

சுமார் 65 ஆயிரம் பார்வையாளர்கள் திரண்டிருந்த மைதானத்தில் இங்கிலாந்து - வேல்ஸ் அணிகளுக்கு இடையிலான ஆட்டம் பரபரப்பாக இடம்பெற்றது.

ஆட்டம் தொடங்கியதும் ஆரம்பம் முதலே இங்கிலாந்து அணி தனது பலத்தை நிரூபித்தது. லம்பேட், மற்றும் பெக்காம் ஆகியோர் கோல்களை அடித்து தமது அணியின் வெற்றியை உறுதி செய்தனர்.



இதேவேளை இன்னொரு உலகக்கிண்ண தகுதிச் சுற்று ஆட்டத்தில் பிரான்ஸ், அயர்லாந்து அணிகள் மோதின.

இதில் இரு அணிகளாலும் கோல் எதையும் போடமுடியாததால் ஆட்டம் சமநிலையில் முடிந்தது.

பிரான்ஸ், அணியின் போட்டி என்பதால் இந்தப்போட்டியைக் காண சுமார் 75 ஆயிரம் ரசிகர்கள் ஒன்றுதிரண்டிருந்தனர்.



வலுமிக்க பிரான்ஸ் அணி இலகுவாக அயர்லாந்து அணியைத் தோற்கடித்துவிடும் என்று நம்பப்பட்டபோதிலும் - அயர்லாந்து அணி விட்டுக்கொடுக்காமல் மோதியது.

எப்படியாவது ஒரு கோலைப் போட்டுவிடவேண்டும் என்ற முனைப்பில் பிரான்ஸ் அணியின் முன்னணி வீரர்கள் கடும் முயற்சி எடுத்தனர்.

ஆயினும், கடைசிவரை இரண்டு அணிகளாலும் கோல் அடிக்கமுடியாமற் போனதால் ஆட்டம் சமநிலையில் முடிவடைந்தது.

இதேவேளை, மூன்றாவது தகுதிச் சுற்று ஆட்டத்தில் ஸ்கொட்லாந்து அணியை நோர்வே அணி 0:1 என்ற அடிப்படையில் வெற்றி கொண்டது.

சுமார் 48 ஆயிரம் ரசிகர்கள் பார்வையிட்ட இந்தப் பரபரப்பான ஆட்டத்தில் நோர்வேயின வீரர் ஜவிர்சென் கோல் அடித்து தமது அணியை வெற்றி நோக்கி இட்டுச் சென்றார் என்பது குறிப்பிடத்தக்கது.

2006 ஆம் ஆண்டு நடைபெறவுள்ள உலகக் கிண்ண உதைபந்தாட்டப் போட்டியிற் கலந்து கொள்ளும் 16 நாடுகளின் அணிகளைத் தெரிவு செய்வதற்கான தகுதிச் சுற்று ஆட்டங்கள் ஒவ்வொரு கண்டங்கள் ரீதியாகவும் நடைபெற்று வருகிறன.

இந்த வகையில் ஐரோப்பிய கண்டத்தைச் சேர்ந்த நாடுகளுக்கிடையில் போட்டிகள் நடைபெற்று வருகிறமை குறிப்பிடத்தக்கது.

# நடுவருடன் வாதாடிய ஷேவாக்கிற்கு அபராதம்!



நடுவரின் தீர்ப்பை எதிர்த்து வாதாடிய குற்றத்துக்காக இந்திய அணியின் துடுப்பாட்ட வீரர் வீரேந்தர் ஷேவாக்கிற்கு இரண்டரை இலட்சம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டது.

பெங்களூரில் அவுஸ்ரேலிய அணிக்கு எதிரான முதலாவது டெஸ்ட் போட்டி நேற்றுடன் முடிவுற்றது. இந்தப்போட்டியின் நான்காவது நாள் ஆட்டத்தின்போது, இரண்டாவது இனிங்சில் இந்திய அணி விளையாடியது.

ஆரம்பத் துடுப்பாட்ட வீரராகக் களம் இறங்கிய ஷேவாக் ஓட்டம் எதையும் பெறாத நிலையிலேயே- அவுஸ்ரேலியப் பந்துவீச்சாளர் மக்ரா வீசிய பந்தில் எல்.பி.டபிள்யூ முறையில் ஆட்டமிழந்ததாக அறிவிக்கப்பட்டது.

மக்ரா வீசிய பந்தை ஷேவாக் அடிக்க முயன்றபோது அது துடுப்பு மட்டையில் பட்டுக் காலில் பட்டது. இதை நியூஸிலாந்து நடுவரான பில்லி போடன் அவுட் என்று தவறாகத் தீர்ப்பு வழங்கினார்.

தொலைக்காட்சிப் பதிவு, நடுவரின் தீர்ப்புத் தவறானது என உறுதி செய்தது.

நடுவரின் தவறான தீர்ப்பில் ஆத்திரம்கொண்ட ஷேவாக் நடுவருடன் தர்க்கம் செய்தார்.

இது குறித்து ஐ.சி.சியின் போட்டி நடுவர் ரஞ்சன் மடுகல்லவிடம் புகார் செய்யப்பட்டது. அவர் உடனடியாக ஷேவாக்கிடம் விசாரணை நடத்தினார்.

நடுவரின் தீர்ப்பை எதிர்த்து மைதானத்தில் ஷேவாக் தர்க்கம் செய்தது ஐ.சி.சி.விதி முறைகளுக்கு முரணானது. இதனால் அவருக்கு சம்பளத்தில் ஒரு பகுதி அபராதமாக விதிக்கப்படலாம், அல்லது ஒரு டெஸ்ட் போட்டியில் ஆடத் தடை விதிக்கப்படலாம் என எதிர்பார்க்கப்பட்டது.

இந்த நிலையிலேயே நேற்று போட்டி மத்தியஸ்தர் ரஞ்சன் மடுகல்ல தனது தீர்ப்பை அறிவித்தார்.

ஷேவாக் மைதானத்தில் ஐ.சி.சி விதிமுறைகளுக்கு முரணாக நடந்துகொண்டதால் - இரண்டரை லட்சம் ரூபா அபராதம் செலுத்துமாறு அவர் உத்தரவிட்டார்.

எனினும், ஷேவாக் போட்டிகளில் ஆடுவதற்கு எந்தத் தடையும் விதிக்கப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

# காவலரண் அமைக்கும் முயற்சி
# கைதடியில் தடுத்து நிறுத்தப்பட்டது

(கைதடி)

கைதடிச் சந்திப் பகுதியில் காவலரண் அமைக்கப் படையினர் எடுத்த முயற்சி அந்தப் பகுதி மக்களின் எதிர்ப்பால் கைவிடப்பட்டது.

நேற்றுமுன்தினம் காலை 9 மணியளவில் இந்தச் சம்பவம் இடம்பெற்றது. இது குறித்து மேலும் தெரியவருவதாவது -

கைதடிச் சந்திக்கருகில், முச்சக்கரவண்டிகள் நிறுத்தும் இடத்தில் இராணுவத்தினர் காவலரண் ஒன்றை அமைக்கும் நோக்கத்துடன், அந்த இடதைத் துப்புரவாக்கும் வேலையை மேற்கொண்டிருந்தனர். படையினரின் இந்த முயற்சி முச்சக்கர வண்டிச் சாரதிகளாலும், மக்களாலும் தடுக்கப்பட்டது. இதனால், இராணுவத்தினருக்கும் பொதுமக்களுக்கும் இடையில் வாக்குவாதமேற்பட்டது. இதனால், அந்தப் பகுதியில் பதற்றம் நிலவியது.

சுமார் ஒரு மணி நேரமாக இடம்பெற்ற இந்தக் குழப்ப நிலையால், காலை 9 மணிமுதல் 10 மணிவரை அந்த வீதியால் போக்குவரத்துச் செய்த வாகனங்களும் தடுத்து நிறுத்தப்பட்டு, போக்குவரத்து ஸ்தம்பித்தது.

இந்தச் சம்பவம் உடனடியாக போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவுக்கு அறிவிக்கப்பட்டு, அவர்கள் வந்து நிலைமையை சுமுகமாக்கினர்.

பின்னர் இராணுவத்தினர் தமது முயற்சியைக் கைவிட்டுவிட்டு அந்த இடத்தைவிட்டு நகர்ந்துசென்றனர்.

# பனை ஆராய்ச்சி நிலையத்தை இயங்கவைக்குமாறு கோரிக்கை

தென்மாராட்சி கைதடியிலுள்ள பனைவள ஆராய்ச்சி நிலையத்தைப் புனரமைப்பு செய்து, மீள இயக்குவதற்கு நடவடிக்கைகளை எடுக்குமாறு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

பனைவளம் செறிவாகக் காணப்படும் யாழ்.குடாநாட்டில் பனைவளம் தொடர்பான ஆராய்ச்சிகளை மேற்கொண்டு, பனை வளத்தை நம்பி வாழும் மக்களின் மேம்பாடுகளை- கைதடியில் அமைக்கப்பட்ட பனைவள ஆராய்ச்சி நிலையம் இராணுவ ஆக்கிரமிப்புக் காரணமாக கடந்த காலங்களில் சேதமாக்கப்பட்டது.

இதனால், பனை வளத்தை நம்பி வாமும் மக்களின் மேம்பாட்டில் பாரிய வீழ்ச்சிகள் உருவாகி இருப்பதேலே மேற்படி பனைவள ஆராய்ச்சி நிலையத்தை புனரமைத்து, இயங்க நடவடிக்கை எடுக்குமாறு கோரப்பட்டுள்ளது. (17)

# வெளிநாட்டு புலமைப்பரிசிலுக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன

(யாழ்ப்பாணம்)

கல்வி அமைச்சின் உயர்கல்விப்பிரிவு ஆரம்பப்பட்டப்படிப்புக்களுக்கான வெளிநாட்டுப் புலமைப் பரிசில்களை, க.பொ.த.தரத்தில் திறமைச்சித்தி பெற்றவர்களுக்கு வழங்குவதற்காக விண்ணப்பங்களைக் கோரியுள்ளது.

2005 ஆம் ஆண்டு ஜனவரி கல்வியாண்டுக்கு - ரஷ்யா, சீனா, இந்தியா, பங்களாதேஷ், பாகிஸ்தான், கியூபா, ஈராக் போன்ற நாடுகளால் புலமைப் பரிசில்கள் வழங்கப்படவுள்ளன. இந்தப் புலமைப்பரிசில்களுக்கான நிபந்தனைகள், வழங்கும் நாடுகளால் தனித்தனியாக வரையறுக்கப்படவுள்ளன.

இலங்கைப் பிரஜையாக இருந்தல், ஆங்கில மொழியில் சிறந்த அறிவு, விண்ணப்பிக்கும் துறை தொடர்பாக க.பொ.த.உயர்தரப் பரீட்சையில் சித்தி என்பன அடிப்படைத் தகுதியாக எதிர்பார்க்கப்படுகின்றன.

விண்ணப்பங்கள் யாவும் நவம்பர்மாதம் 12 ஆம் திகதிக்கு முன்பாக செயலாளர், கல்வி அமைச்சு, உயர்கல்விப்பிரிவு, இல.18, வோர்ட் பிளேஸ், கொழும்பு - 07 என்ற முகவரிக்கு அனுப்பிவைக்கப்படல் வேண்டும்.

மேலதிக விபரங்களை இந்த மாதம் 8 ஆம் தகதி வெளியிடப்பட்ட அரச வர்த்தமானிப் பத்திரிகையில் பார்வையிடலாம். (31)

# முன்பள்ளி மேம்பாட்டு நிலையத்தின் அனுசரணையுடன் மாபெரும் கண்காட்சி

வடக்கு - கிழக்கு மாகாண பிள்ளைநேய அபிவிருத்தி நிலையங்கள், யாழ்.மாவட்ட முன்பள்ளி கல்வி மேம்பாட்டு நிலையத்தின் அனுசரணையுடன் இன்றும் நாளையும் மாபெரும் கண்காட்சி நிகழ்வொன்றை நடத்தவுள்ளது.

கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையில் காலை 9 மணிமுதல் மாலை 4.30 மணிவரை இந்தக் கண்காட்சி நிகழ்வு நடைபெறவுள்ளது.

கல்வி அமைச்சின் சிரேஷ்ட உதவிச் செயலாளர் எஸ்.மகாலிங்கம் தலைமையில் இன்று ஆரம்பமாகவுள்ள முதலாம் நாள் நிகழ்வில்- பிரதம விருந்தினராக கல்வி அமைச்சின் செயலாளர் ஆர்.தியாகலிங்கமும், சிறப்பு விருந்தினராக யாழ். மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் இளம்பரிதியும் கலந்துகொள்ளவுள்ளனர்.

நாளை நடைபெறவுள்ள நிகழ்வுக்கு யாழ்.வலயக் கல்விப் பணிப்பாளர் பி.விக்னேஸ்வரன் தலைமை தாங்கவுள்ளார்.

இதில் சிறப்பு விருந்தினர்களாக மகளிர் அரசியற்துறைப் பொறுப்பாளர் கலைவிழி, தமிழர் புனர்வாழ்வுக் கழகப் பணிப்பாளர் ஜெயராஜ் ஆகியோரும், கௌரவ விருந்தினர்களாகப் பேராசிரியர் க.சின்னத்தம்பி, மேலதிக மாகாணக் கல்விப்பணிப்பாளர் திருமதி செ.மகாலிங்கம் ஆகியோரும் கலந்துகொள்ளவுள்ளனர்.

இரண்டு நாட்களும் கலை நிகழ்வுகளும் இடம்பெறவுள்ளன.


இனிய பிறந்தநாள் வாழ்த்துக்கள்

முதலாவது அகவையில்



பெயர் : ஜூட்ஜோன் ஏட்சியன்
முகவரி : கந்தர்மடம் வீதி, யாழ்ப்பாணம்.

முதலாவது அகவையில்



பெயர் : ற.காவியா
முகவரி : சுவிஸ்


## பட்டப்பகலில் சைக்கிள் திருட்டு

வீட்டுவாசல் முன்பாக நிறுத்தி வைக்கப்பட்டிருந்த சைக்கிள், வீதியால் சென்ற நபரால் திருடப்பட்ட சம்பவமொன்று கடந்த வியாழக்கிழமை உடுவிலில் இடம்பெற்றது.

உடுவில் கற்பொக்கணைப் பகுதியில் வசிக்கும் பூசகர் ஒருவர், கோவில் பூசையை முடித்துவிட்டு வந்து சைக்கிளை வீட்டின் முன்பாகவுள்ள தாழ்வாரத்தில் நிறுத்திவிட்டு, உள்ளே சென்று தேநீர் குடித்துக்கொண்டு நிற்கும்போது யாரோ சைக்கிளை எடுக்கும் சத்தம் கேட்டு ஓடிவந்து பார்த்தபோது முன்பின் அறிமுகமில்லாத ஒரு வழிப்போக்கன் சைக்கிளை எடுத்துக்கொண்டு ஓடியதாகத் தெரிவித்தார்.

உடனடியாக அயலவர்களின் உதவியுடன் திருடனைத் துரத்திய போதும், சைக்கிளை மீட்க முடியவில்லை. இதுபற்றி சுன்னாகம் பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. (101)

## மரம்நாட்டு விழா

உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன கல்லூரியில் எதிர்வரும் 17 ஆம் திகதி மரம் நாட்டும் நிகழ்வு வைபவரீதியாக வடமாராட்சி தெற்கு, மேற்கு பிரதேசசபை செயலர் ஏ.எம்.ஜோசப்பால் ஆரம்பித்து வைக்கப்படவுள்ளது.

இதனைத்தொடர்ந்து கரவெட்டி சமுர்த்தி உத்தியோகத்தர் காரியாலயம், 350 பயன்தரும் மரக்கன்றுகளை வனத்திணைக்களத்திடம் இருந்து பெற்று பொதுநிறுவனங்கள், பாடசாலை என்பவற்றுக்கு வழங்கவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (14)

## ஆங்கிலப் பயிற்சி நெறி

சர்வதேச தமிழீழ மாணவர் பேரவையால் நடத்தப்பட்டு வரும் ஆங்கிலப் பயிற்சி நெறிக்குப் புதிதாக மாணவ, மாணவியர்கள் உள்வாங்கப்படவுள்ளனர்.

இந்தக்கற்கை நெறியைப் பயின்று சான்றிதழ் பெருவிரும்பும் உயர்தரக் கல்வியைத் தொடரும் மாணவர்கள், மாணவர் பேரவையில் விண்ணப்பப் படிவத்தைப் பெற்றுப் பூர்த்தி செயது வழங்கியபின் உள்வாங்கப்படவுள்ளனர். இந்தக்கற்கை நெறியானது முற்றிலும் இலவசமாக நடைபெறுவதுடன், வாசிப்பு, எழுத்து, பேச்சு ஆகிய திறமை அடிப்படையிலேயே சான்றிதழ்களும் வழங்கப்படவுள்ளது.

### காசோலைகள் அனுப்பிவைப்பு

மீள்குடியமர்ந்த குடும்பங்களுக்கான மீள்குடியமர்வுக்கொடுப்பனவு தென்மராட்சி பிரதேசத்தைச் சேர்ந்த கெற்பெலி - தவசிக்குளம், கொடிகாமத்தில் சில பகுதிகளைச் சேர்ந்த சுமார் 600 குடும்பங்களுக்கு வழங்கப்படவுள்ளது.

அவர்களுக்கான காசோலைகள அவர்களது வங்கிகளுக்கு நேரடியாக அனுப்பிவைக்கப்பட்டுள்ளதாக தென்மராட்சி பிரதேச செயலக நிர்வாக அலுவலர் ச.வீரசிங்கம் தெரிவித்தார். (24)

### அடையாள அட்டை கண்டெடுப்பு

ஏழாலை தெற்கு, மயிலங்காடு என்னும் முகவரியைச் சேர்ந்த குண்டுமணி பகீரதன் என்பவரது தேசிய அடையாள அட்டை கண்டெடுக்கப்பட்டு, நமது ஈழநாடு அலுவலத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. உரியவர் அலுவலக நேரத்தில் நேரில் வந்து பெற்றுக்கொள்ளவும்.

## படங்களும் செய்திகளும்...



யா/நாவற்குழி மாகாவித்தியாலய பரிசளிப்பு நாள் நிகழ்வு அண்மையில் நடைபெற்ற போது பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட கலாநிதி சபா.ஜெயராசா மங்கள விளக்கேற்றி நிகழ்வை ஆரம்பித்து வைப்பதையும், அருகில் வித்தியாலய அதிபர் திருமதி வ.மேகலிங்கம், பானுமதி ஜெயராசா ஆகியோர் அருகில் நிற்பதையும் காணலாம்.



இந்தமாதம் 2 ஆம் திகதியன்று யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியில் "மரணம் துப்பிய எச்சில்" என்ற கவிதை நூல் வெளியீட்டு விழாவில் பீடாதிபதி கலாநிதி கமலநாதனிடம் விரிவுரையாளர் இரட்ணேஸ்வரன் முதல் பிரதியை வழங்குவதையும், நூலாசிரியர் எஸ்.எல்.எம்.குத்தூஸ் அருகில் நிற்பதையும் வழங்குவதைப் படத்தில் காணலாம்.





ஆனைப்பந்தி மெதடிஸ்த மிஷன் வித்தியாலயத்தில் அண்மையில் நடைபெற்ற ஆசிரியர்தின விழா நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட யாழ்.வலய பிரதிக்கல்விப்பணிப்பாளர் வ.இராசலிங்கம் மற்றும் வித்தியாலய அதிபர் எஸ்.சோமேஸ்வர ஐயர் ஆகியோரையும், வித்தியாலய ஆசிரியர்களையும் படத்தில் காணலாம்.

# மாணவ ஆலோசனைக்கு ஆசிரியர்களுக்குப் பயிற்சி

பாடசாலை மாணவர்களுக்கு வழிகாட்டி, ஆலோசனைச் சேவை வழங்குவதற்காக ஆசிரியர்களைப் பயிற்றுவிப்பதற்கான செயற்திட்டத்தை தேசிய கல்வி நிறுவகம் ஆரம்பித்துள்ளது.

மாகாணக்கல்வி அமைச்சினால் சிபார்சு செய்து அனுப்பப்படும் ஆசியாகளுக்கே இந்தப்பயிற்சிகள் வழங்கப்படவுள்ளன. நாளை முதல் தொடர்ந்து நான்கு நாட்கள் வரை மகரகமவிலுள்ள தேசிய கல்வி நிறுவக கேட்போர் கூடத்தில் இந்தப் பயிற்சிகள் வழங்கப்படவுள்ளன. பயிற்சியில் கலந்துகொள்ளும் ஆசிரியாகளுக்கு தங்குமிட வசதி, உணவு வசதி என்பன ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதுடன், நாளொன்றுக்கு 300 ரூபா ஊக்குவிப்புக் கொடுப்பனவும் வழங்கப்படவுள்ளது. (31)




# தேர்

கே.வி.நடராஜன்






இன்று முத்து மாரி அம்மன் கோயில தேர்.

தேரின்போது இவ்வாறு ஒரு போதுமே மழை பயமுறுத்தியது கிடையாது. காலையிலிருந்தே கனத்த கருமுகிலின் அடைப்பிற்குள் சிறைப்பட்டிருந்த சூரியனின் முகத்தைக் கூடப் பார்க்க முடியவில்லை. பொழுதைப் பார்த்து நேரததைக் கணிக்கும் ஊருக்குத் திட்ட வட்டமாக எதுவும் சொல்ல முடியவில்லை.

ஒரு குறிப்பின் - அனுமானத்தில் - கிட்டத்தட்ட நேரம் எட்டு, ஒன்பது மணியிருக்கும் என்ற ஊகம்.

"மழை வரப்போகுது கந்தசாமி. வாய்முட்டிக்கு காசோலை வைச்சுக் கட்டு" பனையிலிருந்த கந்தசாமிக்கு, ஐயாத்துரை அண்ணர் குரல் கொடுக்கிறார். பின்னேரக் கள்ளிற்குள் தண்ணீர் போய் 'சப்' என்று ஆகிவிடப் போகின்றதே என்ற கவலை அவருக்கு.

"வருஷா வருஷம் இப்பிடித் தானண்ணை. தேருக்கும் தீர்த்தத் திலண்டைக்கும் அந்தநேரம் பார்த்து மப்பும், மந்தாரமுமாக வந்துவிடும். எல்லாம் அம்மாளாத்தையின்ரை புதுமை" என்றான் கந்தசாமி.

"நீ தேருக்கு வரவில்லையோ கந்தசாமி?" ஐயாத்துரை அண்ணர் கந்தசாமியைக் கேட்கிறார்.

"என்ன கோயிலும், குளமும்? இஞ்சை இருந்துகொண்டு நினைச்சால் அம்மாளாத்தை அருள் புரிய மாட்டாளோ? அல்லவெண்டால்... நாங்கள் வரவில்லை எண்டதுக்காக தேர் இழுபடாமல் நிண்டுவிடப் போகுதோ?" சலித்துக்கொண்டு பதிலளிக்கின்றான் கந்தசாமி.

"குளத்தோடை கோவிச்சுக் கொண்டு குண்டி கழுவாமல் விட்டவன் கதையாகப் பேசுகிறாய் கந்தசாமி. அறியாத மூடர்களின் செயலுக்காகத் தெய்வத்தை வெறுப்பதா? இண்டைக்குக் கட்டாயம் மழை வரும் கந்தசாமி, தேரும் இழுபடப் போவதில்லை இருந்து பார். இந்தக் குடிகார ஐயாத்துரை எங்கை சொன்னானெண்டு."

இருண்டு குமுண்ட இடிமுழக்கத்துடன் குளிர்காற்றும் கலந்து வரவே மழை முறையாகக் கொட்டப்போவதாகவேபட்டது. கந்தசாமிக்கும் இந்தப் பயம் தந்த அவசரத்தில் மிகுதித் தொழிலைச் செய்ய விரைகிறான்.

நெஞ்சின் நினைப்பில் ஐயாத்துரை அண்ணரும், மழையும் தேரும், தேர்வரும் வீதியும் மாறி மாறிப் புரள்கின்றன.

இன்று மழை வரவேண்டும் என்ற நேர்ததியுடன் அதுவும் வானம் கிழிதது வையகமெல்லாம் மூழ்கி விடத்தக்க மழை வேண்டும் என்ற ஓர் உள் அந்தரங்க நினைப்பை ஐயாத்துரை அண்ணரின் பேச்சினூடே கண்டான் கந்தசாமி.

'தேரும் இழுபடப்போவதில்லை என்றாரே! தேர்வரும் வீதியை நினைத்தே அவ்வாறு சொல்லியிருக்க வேண்டும். துந்துமியின் சிந்துதலே போதும் சேறாவதற்கு இந்த மண். பின்பு சொல்லவா வேண்டும்?'

'கந்தசாமி கட்டாயம் கோயிலடிக்கு வா. வரும்போது சரவணன், சங்கரன், சண்முகம், சின்னவன் மற்றச் சகாக்களையுங் கூட்டிக்கொண்டு வா என்றும் சொன்னாரே...'

ஓ! இந்த ஐயாத்துரை அண்ணன்ரை அறிவும், அன்பும், அருளும் ஏன் மற்றவருக்கு வருவதில்லை? கள்ளின் மகிமையென்று சொல்லுவதா? சேச்சே! அப்படியெனறால் முத்துமாரி அம்மன் கோயிலில் நின்று முகாந்திரம் செய்யும் தம்பர், வில்வநாதர், தில்லையார், மயிலர் இன்னும் சிலரும் குடிகாரர்கள் தானே? ஈரமில்லாத இந்தக் கல்நெஞ்சர்கள். சாதியைப் பற்றிப் பேசி இழிந்துரைத்துப் போனமுறை ஆலயப் பிரவேசம் செய்யப்போன போது, கோயில் கதவை இழுத்துப் பூட்டியவர்களாயிற்றே! அன்றிலிருந்து இந்த முத்துமாரி ஆத்தையும் கம்பிக் கிறாதிக்குள் சிறைப்பட்டவளாயிற்றே! ஐயாத்துரை அண்ணர் மட்டும் குறுக்கே வந்திருக்காவிட்டால்...?

என்ன இருந்தாலும், இந்த மனிதனின் அன்பிற்குக் கட்டுப்பட்டே ஆகவேண்டிக் கிடக்கு. நம்மை அரவணைத்துச் செல்லாதவர்களின் கோயிலுக்குச் செல்வதில்லையென்று ஒதுங்கி இருந்தாலும், இந்த ஐயாத்துரை அண்ணர் சொல்கிறார். "குளத்துடன் கோபமெண்றால் குண்டி கழுவாமலா இருந்து விடுவது? தெய்வத்தின் முன்னே நீ வேறு நான் வேறல்ல. தெய்வத்தின் அருகே சென்று வழிபடக் கத்தியும், பொல்லும் மற்றும் ஆயுதமும் எதற்கு? அதற்கு அன்பு என்ற ஒன்று போதும். இந்தத் தில்லையனும், தம்பனும் மற்றும் சாதிவெறியர்களும் ஒருநாள் திருந்தி வழிக்கு வரத்தான் போகிறார்கள். ஆனால், நீங்கள் ஒதுங்கிவிடக்கூடாது. தொடர்ந்து போராட வேண்டும். கந்தசாமி கம்பிவேலி போட்டிருந்தாலும், கோயிலுக்கு நாங்கள் போயே ஆகவேண்டும். கந்தசாமி என்று தன்னையும் எங்களுடன் ஒருவனாக்கிக் கொண்ட ஐயாத்துரை அண்ணனின் அன்புக்குக் கட்டுப்பட்டே ஆகவேண்டிக் கிடக்கு.

"அப்ப நீங்கள் போங்கண்ணை பின்னால வாறம்..."

கட்டாயம் வந்துவிடு கந்தசாமி. காரியம் தானாகவே கைகூடி வருகின்றது என்று வழிக்கு வழி சொல்லிச் சென்ற ஐயாத்துரை அண்ணரின் நினைவுகளுடன் தொழிலை முடிக்கிறான் கந்தசாமி.

காரியம் தானாகவே கைகூடி வருகின்றதென்றாரே! அதென்ன? மூளையின் இரத்த நாளங்கள் புடைத்த சிந்தனை. விடைதான் கிடைக்கவில்லை.

ஞானிகளும், தீர்க்கதரிசிகளும் வரப்போவதை முனகூட்டியே சொலலி விடுவதில் வல்லவர்களாம். ஐயாத்துரை அண்ணர் ஞானியா? தீர்க்கதரிசியா?

"குடிகாரப் பயல், கீழ்ச் சாதிக்காரர்களுக்காகப் பரிந்து பேசிக்கொண்டு திரிபவன்". என்று அண்ணருடைய ஆட்கள் அவருக்கு நேர் நின்று பேசாத பேச்சுக்கள் இவை.

என்னண்ணை இப்படியெல்லே சொல்லிப் பேசுகினம் என்றால், முதுகெலும்பில்லாதவங்கள்! குலைக்கிற நாயும் கடிக்கிறதோ கந்தசாமி? ஆயிரம் சொல்லட்டும். அதை விடு கந்தசாமி என்பார்.

உண்மை தான். அண்ணர் குலைப்பதில்லை கடித்தே போடுவார். ஆனால், இப்போதெல்லாம் அண்ணர் அறிவுக்கே முதலிடம் கொடுக்கிறார்.

கந்தசாமியின் நினைப்பு கோயில் வரையும் தேர் வடமாக நீண்டு கொண்டு வந்தது. தேரும் இழுக்கத் தொடங்கி, தெற்கு வீதிக்கு வந்து விட்டது. வானமும் பொருமிக் கொண்டே இருக்கிறது. தூறலும் விழத்தொடங்கிவிட்டது. தெய்வம் புதுமை செய்யப் போவதில்லை என்று கண்ட உயர்சாதிப் பக்தர்கள் தேரை இழுத்திச் செல்ல வெகுவாக அவசரப்படுகிறார்கள்.

தேர் மேற்கு வீதிக்கு வந்த போது முத்துமாரி அம்மன் கோயில் தேரின்போது, இவ்வாறு ஒரு போதுமே மழை பெய்ததுகிடையாது என்று சொல்லும் அளவுக்கு மழை புதுமை செய்து காட்டியது.

மழையா அது? அம்மனின் அகோரத் தாண்டவம். உலகம் முடிவாகும் ஊழிக்கூத்து! மழையும் புயலும் இணைந்து போர்க்கோலம் பூண்டு நின்றன. இடியும், மின்னலும் எதையும் கேட்காமலும், பார்க்காமலும் 'ஊழி' செய்கின்றன. இயற்கையின் பல முனைத் தாக்குதல்களால் திக்குத்திசை தெரியாது பக்தர்கள் தட்டுத்தடுமாறி சேற்றில் புதையுண்ட கால்களைத் தூக்கி வைத்தோட முடியாத பெரும் சிரமத்தினூடே விழுந்தும், எழுந்தும் சென்று கோயிலையும், மடத்தையும் அடைத்துக் கொண்டு நின்று நடுங்குகிறார்கள்.

தேரும் அதன் கம்பீரத் தோற்றமும், தோரணங்களும் எல்லாம் அலுக்குலைந்து போய்ப் பார்ப்பதற்கு பெரும் படகொன்று கடலில் மூழ்கும் காட்சி நிலத்தில் புதைந்து சரிந்த நிலையில் நின்றிருந்த அந்தப் பெரிய பழைய கட்டுத்தேர் பிரண்டு விடுவேன், பிரளப் போகிறேன் என்று. பயமுறுத்திக் கொண்டு நின்றது. தேரை இழுத்துக் கிளப்பும் முயற்சி தொடர்ந்து சென்றாலும், வடக்கையிற்றுடன் உருவுப்பட்டு விழுந்தவர்களே இன்னும் எழுந்திருக்கவில்லை. மேலும் சற்றுத் தாமதித்தாலும் சரிந்து கொண்டிருக்கும் தேர் நிச்சயம் பிரண்டு விடுமென்பது திண்ணம்.

என்ன செய்யலாம்? கோயில் நிர்வாகிகள் நனைந்து குறாவி குளிரில் நடுங்கியபடி கூடிநின்று ஆலோசிக்கின்றார்கள்.

ஐயாத்துரை இல்லாமல் தேர்-இனி அசையாது. ஆனால், ஐயாத்துரை என்ன சொல்வார் என்பது இவர்களுக்கும் தெரியும்.

இக்கட்டான நிலை. கீழ்ச் சாதியினரைக் கொண்டு தேரை இழுப்பிக்கவா?

ஆபத்துக்குப் பாவமில்லை, துடக்கில்லை. அர்ச்சகரோ ஆரோ ஆலோசனையில் கலந்து கொண்ட ஒருவர் அவசரப்படுத்துகிறார்.

கோயில் நிர்வாகம் வேண்டா வெறுப்பாக ஐயாத்துரை அண்ணரைத் தேடுகிறது.

ஐயாத்துரை அண்ணருக்கும் அவர் சாதிப் பெண் பக்தைகளுக்கும் இடையில் பெரும் வாய்ப்போரொன்று நடந்து கொண்டு இருக்கிறது.

'புதுமையான அம்மாளாச்சியா இருந்தால், வாற மேலைக் கிடையிலை கொள்ளை கோதாரி எல்லாம் வந்து உந்தப் கீழ்சாதியினரையெல்லாம் அள்ளிக் கொண்டு போய்விடவேண்டும்' என்றாள், ஈரச் சருகைச் சேலையையும், தங்கப் பவுண் நகைகளையும் சுமந்து நினற ஒரு நடுத்தர வயதுப் பெண்.

உந்த அறுவார் போன வருஷம் கோயிலுக்கை உள்ளிட்ட தாலைதான், குற்றம் பொறுக்காத அம்மாளத்தை இந்த மாதிரி மழையாகவும், புயலாகவும் சீறிப் பாயுறா என்றாள் தில்லையரின் இரண்டாம் தாரம்.

கறுத்த தலையும், வெள்ளைத் தலையாப் போச்சு காலாதி காலத்திலை முத்துமாரி ஆத்தையின்ரை தினத்தில் இப்படியொரு அழிவு மழை பெய்ததில்லை. அதெல்லாம் சாதி கெட்ட சாதியள் கோயில் குளத்துக்கை உள்ளிட வெளிக்கிட்ட தாலையும் எங்கடை சிலபேர் அவங்கட வீடு வளிய போய் கள்ளு மண்டிக்குக் குந்திக கொண்டிருக்கிறதாலையும் குற்றம் பொறுக்க முடியாத அம்மாளத்தை பெய்யாப் பெருமழையாகக் கொட்டித் தீர்க்கிறா. உவை எல்லாரையும் குறுக்காலை அள்ளிக் கொண்டு போகத்தான் இவ இந்தக் கூத்து ஆடத் துவங்கியிருக்கிறா என்று திட்டித் தீர்க்கிறாள் வேறொரு வயோதிபப் பெண்.

ஓமணை! ஓமணை! பூவில்லாமல் மாலை கோத்து, புரியன் இல்லாமல் பிள்ளைப் பெறுகிறவள் எல்லாம் கோயிலுக்கை நிண்டால், அம்மாளாத்தை பொறுப்பாளா! அதுதான் மழை பிரளயமாகக் கொட்டுது. அவங்களை ஏன் இழுக்கிறியள்? போன வருஷம் நடந்ததுக்கு இந்த வருஷம் பொடி விளக்கினம். வைச்சுக் கதைக் கிறியல், கள்ளப் பரத்தையள் ஐயாத்துரை அண்ணரின் பேச்சில் தில்லையற்றை மனைவி உட்பட பலர் தலை குனிந்து கொண்டார்கள். மேலும் வாய் காட்டினால் கேளாத கேள்வியெல்லாம் கேட்டு நாற வைத்துவிடுவான் ஐயாத்துரை என்பது அவர்களுக்குத் தெரியும். என்ன ஐயாத்துரை விரதகாரச் சனம் நடுங்கியெல்லே சாகப் போகுதுகள் ஏதாவதொரு வழி செய்யாமலுக்கு இப்படியே நிண்டால் தேரும் பிரளப் போகுது என்ற ஐயாத்துரை அண்ணரின் தோளில் கையை வைத்தார் கோயில் முதலாளி குமரகுரு.

செய்யிறதுக்கு என்ன இருக்கு தேரைப் புதைந்த இடத்தில் இருந்து கிளப்பி எடுத்து முகப்புக்குக் கொண்டு போக வேணும் எண்டால், அதுக்குத் திடகாத்திரமான ஆட்கள் வேணும். கழுத்துச் சங்கிலியும், கை வாச்சும், பட்டுவேட்டியோடையும், மினுக்கிக்கொண்டு நிற்கிற உங்கடை உத்தியோகக்காரர் ஆட்களால் அது முடியாது. அவை நொந்த வேலை செய்து பழக்கமில்

## பொக்கிசம்


கே.வி.நடராஜன்

ஈழத்தமிழ் இலக்கியத்தில் ஒடுக்கப்பட்ட மக்களுடைய வாழ்வு, அவற்றின் பின்னணி, அவர்களுடைய பேச்சுமொழி என்பவற்றை மிக அழகாகவும், உறுதியாகவும் சித்தரித்தவர் எழுத்தாளன் கே.வி.நடராஜன். மக்களுடைய மொழியை உள்ளதை உள்ளபடியே இவர் வெகு யதார்த்தமாகச் சித்தரித்தார். இவருடைய முதல் சிறுகதைத் தொகுதியான யாழ்ப்பாணச் சிறுகதைகள் வெளிவந்த போது, மிகவும் பரபரப்பாகப் பேசப்பட்டது. யாழ்ப்பாண மக்களின் வாழ்க்கையை எந்த விதப் பாசாங்குமின்றி, அவர்களுடைய மொழியிலேயே மிகத் துல்லியமாக இவருடைய யாழ்ப்பாணச் சிறுகதைகள் பற்றிக் குறிப்பிடும் விமர்சகர்கள் - யாழ்ப்பாணத்தில் ஒடுக்கப்பட்ட பாமரர்களின் பேச்சு மொழிக்குத் தன்னுடைய எழுத்தின் மூலம், நேர்த்தியாக வெளிப்படுத்திய பெருமை நடராஜனைச் சேரும். யதார்த்தப் பண்பும் உருவகப் பாணியும கலந்திருக்கும் 'வேலி' எனற கதை ஒரு கால கட்டத்தில் யாழ்ப்பாணத்தை வெற்றிகரமாகப் படமாக்குகின்றது என்ற ஏ.கனகரட்ணாவின் விமர்சனம் முற்றிலும் உண்மையானதே.

இவரது 'வேலி' யாழ்ப்பாணச் சிறுகதைகள் 'ஊரும் உலகமும்' ஆகிய சிறுகதைகள் இதுவரை வெளியாகியுள்ளன. கே.வி. நடராஜன் கடந்த 40 ஆண்டு காலமாக எழுதி வருகிறார். கூடுதலாக யாழ்ப்பாண வாழ்க்கை பற்றியே வெகு யதார்த்தமாக எழுதியுள்ள கே.வி.நடராஜன் அதைப் பற்றிப் பின்வருமாறு கூறுகிறார்.

நான் யாழ்ப்பாணத்தவன். யாழ்ப்பாணச் சூழலில் வாழ்பவன். யாழ்ப்பாண மக்களிடம் விசேட தனித் தன்மையுள்ள பண்பாடு இருக்கின்றது. அவர்களுடைய குறைபாடுகளிலேகூட, நமக்கு அனுதாபம் பிறக்கிறது. அவர்களுடைய உள்ளத்து உணர்ச்சிகளையும், நெகிழ்ச்சிகளையும் அவர்கள் மறைக்கிறார்கள். அந்த மறைப்பும் யாழ்ப்பாணக் கலாசாரத்தில் பிரிக்க முடியாத ஒரு அம்சமாகும். இந்த கலாசாரத்தின் இராட்சத பிடிக்குள் சிக்கியுள்ள பாத்திரங்களே அன்றிலிருந்து இனறு வரை என் கதைகளில் அறிமுகப்படுத்தி வருகிறேன். எழுத்தாளன் நடராஜன் இத்தகைய எழுத்துக்களைத் தொடரவேண்டும் என்பதும் வாசகர்களின் வேண்டுகோளும் விருப்பமுமாகும்.

செ.யோகநாதன்.

லாதவை என்றார் ஐயாத்துரை அண்ணர் நைய்யாண்டியாக.

'அதுக்காக....? கோயில் முதலாளி குமரகுரு கேட்கிறார்.

"அதுக்கு அங்கை நிக்கிறாங்கள் பாருங்கோ மரங்களுக்குக் கீழே நனைந்தபடி... கந்தசாமியும் சங்கரனும், சண்முகமும், சின்னவியும் மற்றவர்களும்... அவர்கள் வந்தால்தான் தேர் இனி இழுபடும். "ஐயாத்துரை அண்ணர் சொன்னார்.

"என்ன விசர்க்கதை பேசுகிறாய் ஐயாத்துரை? உனக்கென்ன மூளகீள கெட்டுப் போச்சோ. போனவரியம் உவங்கள் கோயிலுக்கை உள்ளட வந்ததாலதான் இந்த வரியம் இந்தக் கேடெல்லாம் வந்திருக்கு. அப்படியிருக்க இவங்களைக் கொண்டு, தேரை இழுப்பிக்கிறதோ?

எனக்கு மூளை சரியாகத்தான் இருக்கு குமர குருவர். அவங்கள் தேரினைத் தொட்டால், தீட்டு வந்துவிடும் என்றால், நீங்களே இழுத்துக் கொண்டு போங்கோவன். நானா மறிக்கிறன்?" ஐயாத்துரை அண்ணா சொல்கிறார்.

"ஆபத்துக்குத் தோஷமில்லை. அவர்களைக் கொண்டு முதலில் தேரைக் கிளப்பி எடுப்பிப்பம். தேர் பிரளப் போகுது. "ஐயாத்துரை அண்ணரையும், கோயில் முதலாளியையும் சூழ்ந்து கொண்டவர்கள் அவசரக் குதர்க்க நியாயங்களில் ஈடுபடுகிறார்கள்.

"ஆபத்துக் காலத்தில் அவங்களின் உதவிவேணும் அதுக்குப் பிறகு...?" ஐயாத்துரை அண்ணரின் உரத்த கேள்வியில் கனல் பறக்கின்றது. மேற்கொண்டு பேச்சு வராமல் வாய் அடைத்துப் போய் நிற்கின்றார்கள் எல்லோரும்.

"ஆபத்துக் காலத்தில் அண்ணனும், தம்பியும் முறை கொண்டாடி அலுவல் பார்ப்பிச்சுப் போட்டு, உங்கடை ஆபத்து தர்ந்த உடனேயே அவங்களை கூடாத சாதி ...கிறியள். இப்பவும் ஆபத்துக்கும், தீட்டும் இல்லையெண்டா தேரைத் தொடவிடப் போகிறியள்?" அண்ணர் பேசிப் பேசிப் பலமாகச் சிரிக்கின்றார்.

"பிரளப் போகிறேன் பிடியுங்கள் என்னை" என்று கணங் கணமாகச் சரிந்து பயமுறுத்துவது போல் தேர் சரிந்துகொண்டே போகிறது.

அம்மாவின் தேர் பிரண்டால்?

நினைக்கவே பயங்கரமான அந்த நினைப்பை வாய்விட்டுச் சொல்லவே முடியாமல் தவிக்கிறார்கள். ஊரே அழிந்து விடப்போகின்றதே என்று பயந்த நிலையிலும், தொடர்ந்தும் தங்கள் சாதி ஆசாரத்தைப் பேண விரும்புபவர்கள் அரை குறையாக ஐயாத்துரை அண்ணரின் நெருக்கு வாரத்துக்கு உடன்படுகின்றார்கள்.

சரி ஐயாத்துரை நீ நினைக்கிற மாதிரியே செய். கோயில் முதலாளி குமரகுருவும் மற்றவர்களும் தங்கள் இயலாமையை அரை குறை மனத்துடன் ஏற்றுக்கொண்டு, ஐயாத்துரை அண்ணரின் விருப்பத்துக்கு கடைசியில் இணங்க வேண்டியே வந்துவிட்டது. அதோ ...ந்தசாமியும், சரவணனும், சங்கரனும், சண்முகனும் மற்றுமுள்ள பெண் - ஆண் சிறுவர்கள உட்பட சரிந்து நிற்கும் தேரை நிமிர்த்தி இழுக்கும் முயற்சியில் ஈடுபட்டிருக்கிறார்கள்.

மழை கொட்டுகின்றது, புயல் சீறுகின்றது, இடி முழக்கம் நெஞ்சைப் பிளக்கின்றது, வால் வீச்சு மின்னல் கண்களைக் குத்திக் கிழிக்கின்றது. இந்த இயற்கையில் சீற்றத்தையே எதிர்த்து நிற்கிறார்கள் அந்த மனிதர்கள்.

ஓ என்னே மனிதர்கள்!

கந்தசாமியும், ஐயாத்துரை அண்ணரும் தேரின் பீடத்தின் அம்மனின் அருகே நின்று தேர் மேலும் சரிந்து விடாதபடி முண்டு கொடுத்துக் கட்டுகிறார்கள். கீழே புதையுண்ட சில்லை மேலே கிளப்பும் முயற்சியில் மற்றோர் ஈடு பட்டிருக்கிறார்கள்.

இதோ தேர் இழுபடப்போகின்றது. ஐயாத்துரை அண்ணரும், கந்தசாமியும் மற்றுமுள்ளோரும், தேர் வடத்தைப் பிடித்து நிற்கின்றார்கள். ஒதுங்கி நின்ற குமரகுருவரையும், தம்பர் தில்லையரையும் ஐயாத்துரை அழைக்கின்றார்.

அரோகரா அம்மாளாத்தைக்கு அரோகரா, அரோகரா, அரோகரா.

அந்தப் பெரிய கட்டுத்தேர் ஒரு தரம் முறிந்து கொட்டுப்படப் போவதுபோல் நெறுக்கிட்டு உருளத் தொடங்குகின்றது.

அரோகரா, அம்மாளாச்சிக்கு அரோகரா. இடி முழக்கத்துக்குச் சவால் விடும் அந்த மனிதர்களின் அரோகராக் கோஷம் வானை எட்டுகின்றது. எல்லோர் முகங்களிலும் ஏற்பட்டிருந்த கலவரமும் பீதியும் அகன்று ஒருவரையொருவர் வெறுத்து கறுவிக்கொண்டிருந்த துடக்கு மனப்பான்மை அகன்று கிடந்த அந்த வேளையில், அந்த முகங்களில் பிரகாசித்த ஒலிப்பிளம்பில் ஓர் உண்மையைக் கண்ட ஐயாத்துரை அண்ணர் சொல்கிறார்...

"இந்தத் தேரை எனன எந்தத் தேரையும் நாஙகள் இழுத்துச் சென்று இலக்கை அடைய வேண்டுமென்றால், கந்தசாமியாக்களின் சகோதரர், கைகோப்பும் சேர்ந்திருந்தால்தான் இந்த நாட்டில் எங்களாலை தேர் ஓட்ட முடியும்"!

அண்ணர் சொன்னதில் எந்தப் பெரிய அர்த்தம் புதைந்து கிடக்கிறது என்பதை எல்லாரும் உணர்ந்து கொண்டிருப்பார்களா? என்று கந்தசாமி நினைத்தான. ☆

# இலக்கிய வடிவங்கள்.......... மாறுபடுவதற்கான காரணங்கள்

இலக்கியம் என்பது அது எழுந்த காலத்தின் அரசியல், பொருளாதாரம், சமூகம், கலை, கலாசாரம் என்பவற்றைப் பிரதிபலிப்பது. இலக்கியம் என்பது காலத்தின் கண்ணாடி. "இலட்சியம்" என்ற வடமொழிச் சொல்லிலிருந்து தோன்றியதே இலக்கியம். 'இலட்சியம' என்பதற்கு "குறிக்கோள்" என்பது கருதது. மனிதனின் குறிக்கோள்களை விளக்குவது இலக்கியம் எனவும் இலக்கியத்துக்குப் பல்வேறு வகையான கருத்துக்கள் கூறப் படுகின்றன.

இவ்வாறு தோன்றிய இலக்கியமானது பல்வேறு வடிவங்களில் அமைந்திருப்பதனை இனங்காணக்கூடியதாகவுள்ளது. பழந்தமிழ் இலக்கியங்கள் தொடக்கம் புதியவகை இலக்கியங்கள்வரை தெளிவாகச் சொன்னால் சங்ககாலம் தொடக்கம் இற்றைவரையாகப் பல்வேறு இலக்கிய வடிவங்கள் தமிழில் தோன்றியுள்ளன. இந்த இலக்கிய வடிவங்கள் யாவும் தமிழ் இலக்கி



யமாக இருந்தபோதும் அவை பலவகை வடிவங்களில் காணப்படுவதற்கும், மாறுபடு விளங்குவதற்கும் பலவேறு வகையான காரணங்கள் உள்ளன. அந்தக் காரணங்களை ஓரளவுக்கேனும் விளக்குவதே இந்தக் கட்டுரையின் நோக்கமாகும்.

இலக்கியம் ஒன்றின் வாசகர் அல்லது பார்வையாளன் மாறுபடுவதற்கு ஏற்ப இலக்கிய வடிவங்களும் மாறுபடுகின்றன என்பது முதலாவதான காரணம்.

இந்தக் காரணத்தின் கருத்தைச் சற்று விரிவாக நோக்குவோம் -

கம்பராமாயணம் என்ற இலக்கியம் கம்பரால் எழுதப்பட்டது. இது எழுதப்பட்ட காலம் சோழர்காலம் - கம்பரால் எழுதப்பட்ட காரணத்தால் இந்த இலக்கியம் கம்பராமாயணம் என்ற சிறப்புப் பெயரைப் பெறுகிறது.

இந்தக்காலப் பகுதியில் வைணவ சமயத்தின் செல்வாக்கை நிலைநிறுத்தும் நோக்கில், விஷ்ணுவின் அவதாரமான இராமனின் வரலாற்றை - கம்பர் இராமாயணத்தில் காட்டுகின்றார். விருத்தத்தில் வல்லவரான கம்பர் கம்பராமாயணப் பாக்களை விருத்தத்தில் கையாண்டமை ஒரு இலக்கிய உத்தியும், மாற்றமுமாகும். இந்த நூலில் வடநாட்டுக் கதைமரபு, தமிழ்மரபுக்கு இயைநத வகையில் மாற்றி அமைக்கப்பட்டுள்ளது. வில்லிபுத்தூரரின் கதைத் தழுவல் என்பதும் மாற்றம் என்பதும் இங்கு குறிப்பிடப்படவேண்டிய ஒரு விடயமாகும்.

பாத்திரங்களின் உரையாடல்களிலும், பேசும் பாவங்களிலும், கதைப்போக்கில் ஆங்காங்கே நிகழும் நாடகபாவம் நிறைந்த சம்பாசணைகளையும் விளக்குவதில் கம்பனின் கவிதைகள் நிகரற்று விளங்குகின்றன.

இந்தக் கம்பராமாயணத்தில் 10,500 பாடல்கள் உள்ளன. அவை ஆறு காண்டங்களாக வகுக்கப்பட்டுள்ளன.

கவிதைப் பிரியர்களுக்கு மிகச் சிறந்த முறையில் கம்பரால் இராமாயணக் கவிதைகள் படைக்கப்பட்டிருக்கின்றன. இராமனின் கதையைப் பாடல்கள் வடிவில் விளங்கிக்கொள்ள ஏதுவாக அவர் பாடல்கள் நொய்தின் நொய்த சொற்களால் எழுதப்பட்டுள்ளன.

ஐரோப்பியர் காலத்தில் அதே இராமனின் கதையை அருணாச்சலக் கவிராயர் "இராம நாடகக் கீர்த்தனைகள்" என்ற பெயரில் தருகின்றார். இதில் இராவணனின் பெருமைகள் பாடப்பட்ட சந்தக் கவிதைகள் மிகவும் சிறப்பானவை. இந்த நூல் நாடகத் தமிழுக்குச் சிறந்த எடுத்துக்காட்டாக விளங்குவதோடு நாடகத் தமிழுக்கு வளர்ச்சியையும் கொடுத்துள்ளது.

இந்த இரண்டு கதைகளும் வாசகர் பார்வைக்கு ஏற்ப இலக்கிய வடிவம் பெறுகின்றது ஏன்பதற்குச் சிறந்த எடுத்துக்காட்டாகும்.

இலக்கியம் குறிக்கும் பொருள் காரணமாக இலக்கிய வடிவம் எவ்வாறு மாறுகின்றது என்பதை அடுத்து நோக்குவோம் -

சங்ககாலம் என்று வரையறுக்கப்படுகின்ற கிறிஸ்துவுக்குப் பிற்பட்ட முதலாம் நூற்றாண்டு தொடக்கம் மூன்றாம் நூற்றாண்டுவரையான காலப்பகுதியில் எழுந்த இலக்கியங்கள் யாவும் காதல் ஒழுக்கம் சார்ந்து விளங்கியதால் சங்க இலக்கியங்கள் காதல், வீரம் ஆகிய இருவிடயங்களையும் உரைப்பன.

இவை அகவல் ஓசையில் பாடப்படும் போதுதான் சிறப்பைப் பெறுகிறது. அகவல் பாக்கள் அழைத்தல் என்ற ஓசை அமைவையுடையவை. ஒருவரை அழைக்கும் போது ஏற்படுகின்ற ஓசை அமைதியைப் போல அகவல் அமைப்பில் அமைந்த பாடல்களும் அமைகின்றன.

(தொடரும....)

**பூ.நகுலன்**

# நூலகம்




**நூலின் பெயர் :-** **'மரணம் துப்பிய எச்சில்'** **(கவிதைத் தொகுப்பு)**

**எழுதியவர் :-** **எஸ்.எல்.எம்.குத்தூஸ்**

**வெளியீடு :-** **நுண்கலை மன்றம், யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி**

தேசிய கல்வியியற் கல்லூரியின் நுண்கலை மன்றத்தின் வெளியீடாகச் சித்திரத்துறை முகிழ்நிலை ஆசிரியர் எஸ்.எல்.எம். குத்துஸின் "மரணம் துப்பிய எச்சில்" கவிதைத் தொகுதி வெளியிடப்பட்டுள்ளது. "மரணம் துப்பிய எச்சில்"தான் மனித வாழ்வு பிறந்தவுடன் மரணம் எங்களைத் தொடர்கிறது. அது தந்த பிச்சையாகவே இன்றைய வாழ்வு இருப்பதாகக் கருதும் "குத்தூஸ்" தனது கவிதைகளில் இயற்கையில் இருந்து சமூகப் பிரச்சினைகள் வரை பலவற்றையும் தொட்டுப் பார்த்துள்ளார். இவரது இரண்டாவது கவிதைத் தொகுப்பு இதுவாகும். இதில் "கைக்கூ" வடிவக் கவிதைகள் இதில் அடக்கப்பட்டுள்ளன.

அகதிபோல்
எங்கே போகிறாய்,

ஓரத்தில் இருந்து அழுவதற்கா கவா... என்று வானத்தில் அசையும் மேகத்தின் மீது தன் இடப்பெயர்வு வாழ்வின் மனப்பதிவை வெளிப்படுத்தியுள்ளார். கடல்பற்றிய தன் மனப்பதிவை மூன்று வரிகளில் -

*காவியங்கள்*
*காணாமல் போன*
*கலைப்பீடம் என்கிறார்.*

*இன்னொரு பக்கத்தில் -*

*பெண்ணே*
*கல்லறையில்*
*மலர் வைக்கிறாய்*
*உன் கூந்தலை*

மறந்துவிட்டு. என்று விதவைப் பெண்ணின் நிலையை எடுத்துக் கூறுகிறார்.

மேலும் தனது துயர் வாழ்பனுபவக் கவிதைப் பகிர்வாகத் தொடர்ந்து, தான் தூங்காமைக்குக் காரணமும் கூறுகிறார்.

"உறங்காத கண்மணி" என்ற தலைப்பில் அமைந்த கவிதையில் மாவீரர்கள் பற்றிய எண்ணத்தை வெளிப்படுத்தியுள்ளார். 'சாவின் விளிம்பில்' என்ற தலைப்பில் அமைந்த கவிதையில் இராணுவக் கட்டுப்பாட்டுக்குள் இடம் பெறும் அற்பத்தனமான, அநாகரிகமான கனவுகளையும், கனவுகளுக்காக கொல்லப்படுவதை யும் பார்த்துக் கொண்டிக்கும் குத்தூஸின் கவிதைகள் பக்கம், பக்கமாக அழகாக சமூகத்துக்குச் சொல்ல வேண்டியவற்றைக் கொண்டு நகர்த்துகின்றது.

**- சோ.சி.கலைக்கதிர் -**

# நீட்சி

ஒவ்வொரு விடுமுறையின்
பின்வரும்
எனது தூசிபடர்ந்த அறையை
துடைப்பத்தால் சுத்தம்
செய்யும்போது,
தலைதெறித்து ஓடும்
சிலந்திகளும் பூச்சிகளும்
என் வாழ்வை
என்னிடமே கற்றுத் தருகின்றன.

எட்டுக்கால் ஊன்றி
சுவர்களில் ஏறித்
தப்பிக்கொள்ளவும்,
கூரையின் மர இடுக்குகளில்
மறைந்து விடவும் மட்டுமே
தெரிந்தவை அவை.
வாழ்வின் நீட்சியை
மோகிக்கும் இந்த ஆத்மாவோ,

நான்கு புறமும் இழுத்துக்
கட்டப்பட்ட
கூரையின் படங்குபோல்
காற்றில் அலைப்புறுகிறது.
எப்போதும் போல் அல்லாமல்
என்முன்னால் வந்தமர்ந்து
தன் அழகாலும்,
அலையலையான வாலின்
அசைவாலும்,
மீண்டும் மீண்டும்
என்னைக் கவர்ந்து செல்லும்
அந்த 'வால்க்குருவி'யின்
அழகிய உலகில் சஞ்சரிக்கவே
இந்த ஆத்மா
இன்னமும் பிரயாசைப்படுகிறது.

-துவாரகன்-

# தீய்தல்

அனல் வழியென
நீண்டு கிடந்தது பாதை.
மெல்ல வீசிய
காற்றும்
வெம்மையேறித்
தகித்தது.
நடைத்தூரம்
பெருந்தொலைவாய்
அயர்ச்சிதர
வரவேற்க
ஒரு முகமுமில்லா
வெறும் வீட்டின்
கதவு திறக்கிறேன்...
பகலிலும்
இருள் விழுங்கக்
கிடந்த வீட்டின்
"உள்"
எதிர்கொள்கிறதென்னை
வெறுமையாய்...
தொலைதூரம் மழலை
அழுகையொலி
மீட்டிப்போகும் எதையெதையோ...
முகமுள் அளையும் விரல்களோடு
வெம்மைக்குச் சலித்து
யன்னல் திறந்து
ஆடை மாற்றுகையில்
உள் நுழைந்த காற்று
வருடிப்போகும்...
என்றோ கொடியில்
உலரப்போட்ட சேலையையும்
என்னையும்...

-ந.சத்தியபாலன்-

# தொலைந்து போனதே!

என்னே!
என் உதிரத்து உறவுகளின்
இறப்புக்கும், பிறப்புக்கும்
நான் இல்லை
அவர்களின் துன்பத்தில்
துயரத்தில்
எனக்குப் பங்கில்லையா?
எனக்கும் அவர்களுக்கும்
இடைத்தூரம் சிறிதுதான்
ஆனாலும்,
என்பாதம் பதிக்க முடியவில்லை
திறந்த சிறைக்குள் நான்
பரந்த வெளிப்பரப்பில்
பறந்த நாட்களின்
பசுமை நினைவுகள்
பரந்து விரிகின்றன.
ஊமைக் கனவுகளின் உராய்வில்
ஆமையாய் அடங்கிக் கிடக்கிறேன்
அழைத்து அழைத்து அலுத்துப்போய்
அவர்களும் ஓய்ந்து போயினர்,

எனக்கு என்ன செய்வது புரியவில்லை
நான் போகத்தான் வேண்டும்
ஆனால்,
என் அடிமைத்தனத்தை உறுதிப்படுத்தும்
அடையாள அட்டை
எங்கோ தொலைந்துவிட்டதே!

-முருகு பாரிமகன்-

# மாணவர்களுக்கு வழங்கப்பட்டு வந்த மதிய உணவு தற்போது இடைநிறுத்தம்!

(கிளிநொச்சி)

**வன்னிப்பிரதேசத்திலுள்ள பாடசாலைகளில் உலக உணவுத்திட்டத்தால் வழங்கப்பட்டுவந்த மதிய உணவு நிறுத்தப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளதையடுத்து, மாணவர்கள் பெரும் ஏமாற்றம் அடைந்துள்ளனர்.**

**இந்தத் திட்டமானது கடந்த வருடம் யுனிசெப் நிறுவனத்தால் நடைமுறைப்படுத்தப்பட்டு வந்தது.**

இதன் முதற்கட்டமாக மூன்று மாதங்களுக்குப் போதுமான அளவு விநியோகிக்கப்பட்டு வந்த உணவுப் பொருட்கள் கடந்த செம்ரெம்பர் மாதத்துடன் முடிவடைந்து விட்டன. தற்போது இந்த ஆண்டுக்கான மீதி உணவுப்பொருட்கள் வழங்குவது இடைநிறுத்தப்பட்டுள்ளது எனத் தெரிவிக்கப்பட்டுகிறது.

இந்தத்திட்டத்தின் கீழ் அரிசி, பருப்பு, தேங்காய், எண்ணெய், மா, சீனி ஆகியன வழங்குவதாகக் கூறபட்ட போதும் - அரசி, பருப்பு, சீனி ஆகியவை மட்டுமே வழங் கப்பட்டது. இதில் ஒரு பிள்ளைக்கு அரிசி 250 கிராம், பருப்பு 100 கிராம் ஆகிய அளவிலேயே ஒரு நாளைக்கு வழங்குமாறு கூறப்பட்டது.

இவ்வாறு வழங்கப்பட்ட போதிலும் வழங்கப்பட்ட பொருட்கள் யாவும் கடந்த செம்ரெம்பர் மாதத்துடன் முடிவடைந்து விட்டன.

தொடர்ந்து மதிய உணவை வழங்குவதற்கான பொருட்கள் எதுவும் வழங்கப்படவில்லை. இத னால் பல பாடசாலைகளில் மதிய உணவு வழங்கும் பணிகள் நிறுத்தப்பட்டுவிட்டன.

இந்தத் திட்டத்தால் பாடசாலை மாணவர்களுடைய வரவு கணிசமான அளவு அதிகரித்திருந்தது என்பது குறிப்பிடத்தக்கது. மதிய உணவு வழங்குவதை இடைநிறுத்தியதும், மாணவர் வரவு மிகவும் வீழ்ச்சியடையத்தொடங்கியுள்ளமையை அவதானிக்க முடிகிறது.

அத்துடன், யுனிசெப் நிறுவனத்தால் மாலை வேளைகளில் மெல்லக் கற்கும் மாணவர்களுக்கு நடத்தப்பட்டு வந்த விசேட வகுப்புக்கள் நடத்த முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. வறுமைக்கோட்டுக்குக் கீழ் வாழும் பெரும்பாலான பெற்றோர்களால் பிள்ளைகளுக்கான மதிய உணவைக்கொடுத்து, அனுப்ப முடியாத நிலை காணப்படுவதால் மேலதிக கற்பித்தலை மேற்கொள்ள முடியாத நிலை ஏற்பட்டுள்ளதாக ஆசிரியர்கள் தெரிவித்தனர்.

இது தொடர்பாக உலக உணவு நிறுவனம் மதிய உணவு வழங்கும் திடடத்தை பொறுப்பேற்று தொடர்ந்து வழங்குவதற்கான நடவடிக்கையை மேற்கொள்ளுமாறு கல்விச்சமூகம் கேட்டுக்கொள்கிறது.




## பண்ணிசைப் போட்டி

(வட்டக்கச்சி)

கிளிநொச்சி மாவட்ட திருநெறிக் கழகம் நவராத்திரி தினத்தை முன்னிட்டு, கிளிநொச்சி மாவட்டப் பாடசாலைகளுக்கிடையில் பண்ணிசைப் போட்டி நடைபெறவுள்ளது.

இந்தப் போட்டி மூன்று பிரிவுகளாக நடைபெறவுள்ளது. இதில் தரம் 6,7,8 என்பன கீழ்ப்பிரிவாகவும், 9,10,11 மத்திய பிரிவாகவும், 12,13 மேற்பிரிவாகவும் போட்டிகள் நடைபெறும்.

ஒவ்வொரு பாடசாலையிலும் இருந்து ஒவ்வொரு பிரிவுக்கும் மூன்றுக்கு மேற்படாத மாணவர்கள் பங்குபற்ற முடியும் எனவும், அதற்கான விண்ணப்பங்களை அனுப்பிவைக்குமாறும் திருநெறிக் கழகத்தினர் தெரிவிக்கின்றனர். (9)

## கல்விச் செயலமர்வு

(கிளிநொச்சி)

கிளிநொச்சி அக்கராயன் மகா வித்தியாலயத்தில் ஆசிரியருக்கான தொடர் கல்விச் செயலமர்வு கடந்த வெள்ளிக்கிழமை ஆரம்பமாகி, எதிர்வரும் 11 ஆம் திகதி வரை நடைபெற்று வருகின்றது.

## எலும்புக்கூடு கண்டெடுப்பு

(முல்லைத்தீவு)

1996ஆம் ஆண்டு முல்லைத்தீவு முகாம் மீதான தாக்குதலில் பலியான இராணுவத்தினர் ஒருவரின் எலும்புக்கூடு கடந்த செவ்வாய்க் கிழமை கட்டட இடிபாடுகளின் நடுவில் கண்டெடுக்கப்பட்டது.

இருமாடிக்கட்டடச் சிதைவை புனரமைத்துக்கொண்டு, துப்பரவு செய்த வேளையிலே இவ்வெலும்புக்கூடு இராணுவச் சீருடையுடன் காணப்பட்டது.

உடனே இந்த இடத்துக்குச் விரைந்த முல்லைத்தீவு காவல் பணிமனையினர் எலும்புக்கூட்டைப் பார்வையிட்டு, பணிமனைக்கு கொணடு சென்றனர்.

## கிளிநொச்சி தொழில்நுட்ப நிறுவனத்தில் ஆங்கில மொழிமூலம் ஏ.ஏ.ரி.கற்கைநெறி

(இராமநாதபுரம்)

பொருண்மிய மதியுரையக ஆதரவில் லண்டன் ரி.ஆர்.ரெக் அனுசரணையுடன் கிளிநொச்சி மாவட்ட தொழில்நுட்பக் கல்வி நிறுவனத்தில் ஏ.ஏ.ரி.கற்கைநெறி கடந்த திங்கட் கிழமை ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இதன் ஆரம்ப நிகழ்வு கடந்த 25 ஆம் திகதி காலை 10 மணிக்கு தொழில்நுட்பக் கல்வி நிறுவன அதிபர் தி.பிரபாகரன் தலைமையில் அகவணக்கத்துடன் ஆரம்பமாகியது.

இந்த நிகழ்வின தலைமையுரையை தொடர்ந்து, கிளிநொச்சி அரச செயலக கணக்காளரும், கற்கை நெறியின் விரிவுரையாளருமான ப.ஜெயராஜா கற்கை நெறி பற்றியும் அதன் முக்கியத்துவம் பற்றியும் கருத்துரை வழங்கினார்.

தொடர்ந்து, "போரூட்" நிறுவனப் பிரதிநிதியும் நிறுவன ஆளுநர் சபை உறுப்பினருமான கா.சாந்தலிங்கம், அரசசார்பற்ற நிறுவனங்களின் இணையத்தலைவரும், நிறுவன ஆளுநர் சபை உறுப்பினருமான இ.கணேசபிள்ளை, பொருண்மிய மதியுரையக நிறைவேற்றுப் பணிப்பாளர் திலக், பொருண்மிய மதியுரையகத் தலைவரும், யாழ்ப்பாண பல்கலைக்கழக வவசாயபீட பேராசிரியருமான - பேராசிரியர் அ.நவரட்ணராஜா ஆகியோர் கருத்துரை வழங்கினார்கள்.

முதன் முதலாக ஆங்கில மொழி மூலம் இந்தக் கற்கை நெறி நடத்தப்படுவதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

## விவசாய அமைப்புக்களுக்கான கலந்துரையாடல் முழங்காவிலில்!

(முழங்காவில்)

முழங்காவில் பிரதேசத்தில் விவசாய அமைப்புக்களுக்கான கலந்துரையாடல் கடந்த வியாழக் கிழமை 10.30 மணியளவில் ஜெயபுரம் பொது நோக்கு மண்டபத்தில் நடைபெற்றது.

இந்த நிகழ்வு முழங்காவில் பிரதேச தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவன இணைப்பாளர் க.றஞ்சன் தலைமையில் நடைபெற்றது .

இந்தக் கலந்துரையாடலில் விவசாய அமைப்பு, விவசாய போதனாசிரியர் ஆகியோர் கலந்து கொண்டனர்.

இதில் காலபோக நெற்செய்கை மேற்கொள்ளவிருப்பதால், கால்நடைகளை கட்டுப்படுத்த வேண்டும். எனத் தீர்மானிக்கப்பட்டது. இதற்கு விவசாய அமைப்புக்கள் பூரண ஒத்துழைப்பு வழங்க வேண்டுமெனவும் கேட்கப்பட்டுள்ளது. அத்துடன் தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தின் கிராமிய அபிவிருத்தி வங்கி பசுமை நிறுவனங்களால் விவசாயக் கடன்கள் வழங்கப் படவிருப்பதாகப் பொருண்மிய இணைப்பாளர் தெரிவித்தார்.

தொடர்ந்து விவசாயப் போதனாசிரியர்களால் நெற்செய்கை மேற்கொள்ளும் முறைபற்றியும், கிராமங்கள் தோறும்விவசாய அமைப்புக்கள், விவசாயிகளை ஊக்குவிக்கும் நோக்குடன் செயற்படவேண்டும் எனவும் அவர் தெரிவித்தார்.

பின்னர் விவசாய அமைப்புக்களிடம் காணப்பட்ட பிணக்குகள் இனங்காணப்பட்டு, தீர்வும் வழங்கப் பட்டது. (ஸ்ரீ)

## குளங்கள் புனரமைப்பு

(பளை)

பளைப்பிரதேசத்தில் உலக உணவுத்திட்டத்தின் உதவியுடன் கோயில்வயல், பெரியகுளம், சோரன்பற்று, சீராவிக்குளம், மன்னகுட்டைகுளம், இத்தாவில், பெரியகுளம், புலோப்பளை, கிழக்கு முடிச்சுப்பல்லிக்குளம் போன்ற குளங்கள் புனரமைக்கப்பட்டுள்ளது.

இந்தப் புனரமைப்பு வேலைகளில் ஈடுபட்டிருந்த தொழிலாளர்களுக்குத் தொடர்ச்சிக் கொடுப்பனவிற்கான உலர் உணவுகள் வழங்கப்பட்டு வருகின்றது.

## மாலதியின் திருவுருவப்படம் தாங்கிய ஊர்தி வவுனியாவில் பல இடங்களில் பவனி

தமிழீழ பெண்கள் எழுச்சிநாளை முன்னிட்டு, 2 ஆம் லெப்.மாலதியின் திருவுருவப்படம் தாங்கிய அலங்கார ஊர்தி வவுனியா மாவட்டத்தின் பல பகுதிகளிலும் ஊர்வலமாக எடுத்து வரப்பட்டது.

வவுனியா நகரப் பகுதியிலிருந்து ஆரம்பமாகிய இந்த ஊர்திப் பவனி செட்டிக்குளத்தைச் சென்றடைந்தது, அதன் பின்னர் நகரின் ஏனைய பகுதிகளுக்கும் ஊர்திப் பவனி சென்றுள்ளது. இந்த ஊர்திப் பவனி நகரப் பகுதீ மற்றும் பிறநகர்ப் பகுதிகளுக்கு நேற்றுமுன்தினம் சென்றுள்ளது. (03)

## கட்டாக்காலி கால்நடைகளை பிடிப்பதற்கு நடவடிக்கை

கிளிநொச்சி மாவட்டத்தில் காணப்படும் கட்டாக்காலி கால்நடைகளைப் பிடிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

கட்டாக்காலி கால்நடைகள் - பயிர் வகைகளை நாசம் செய்வதை அடுத்தே, இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாக கரைச்சிப் பிரதேச செயலர் பொ.நித்தியானந்தம் தெரிவித்தார்.

இந்த மிருகங்கள் சந்தை, வீதிகளில் நடமாடுவதால், போக்குவரத்துக்கு இடையூறு விளைவிப்பதோடு, கடைகளில் விற்பனைக்காக வைக்கப்படும் பொருட்களை உண்பதால், வியாபாரிகள் நட்டத்தை எதிர்நோக்கி வருவதாகச் செய்த முறைப்பாட்டை அடுத்தே, உடனடியாகக் கரைச்சிப் பிரதேசசபையால நடவடிக்கையில் எடுக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.



எதுவித அடிப்படை வசதியுமின்றி இயங்கி வரும் முல்லைத்தீவு அனிஞ்சியன்குளம் தமிழ்க் கலவன் வித்தியாலயத்தை படத்தில் காணலாம். படம் : பாஸ்கரன்

## கிளிநொச்சி முன்பள்ளி மேம்பாட்டின்கீழ் இயங்கி வரும் 156 முன்பள்ளிகள்

(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்டத்தில் முன்பள்ளி மேம்பாட்டு நிலையத்தின் கீழ் 156 முன்பள்ளிகள் இயங்கிவருகின்றன.

இந்த முன்பள்ளிகளில் - 46 முன்பள்ளிகள் மாத்திரமே நிரந்தரக் கட்டடத்தில் இயங்கி வருகின்றன. ஏனைய 110 முன்பள்ளிகள் தற்காலிகக் கொட்டில்களிலும், தனியாரின் கட்டடத்திலும் இயங்கி வருகின்றன.

இதற்கான நிரந்தரக் கட்டடங்களை அமைத்துத் தருமாறு பல்வேறு நிறுவனங்களிடமும் கோரிகைகை விடுக்கப்பட்டிருந்த போதும் எதுவித நடவடிக்கைகளும் எடுக்கட்படவில்லை என தெரிவிக்கப்படுகிறது.

தமிழர் புனர்வாழ்வுக்கழகம் பொறுப்பேற்ற இந்த முன்பள்ளிகளில் கடமையாற்றும் ஆசிரியர்களுக்கும் பெற்றோர்களும், தமிழர் புனர்வாழ்வுக் கழகமும் சம்பளம் வழங்கி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

## கண்டாவளைப் பிரதேசத்தில் முன்பள்ளி கட்டடம் திறப்பு

கண்டாவளைப் பிரதேச செயலர் பிரிவிலுள்ள தருமபுரம் கிழக்குக் கிராமத்தில் முன்பள்ளி கட்டடத் திறப்பு விழா நிகழ்வு கடந்த வெள்ளிக்கிழமை இடம்பெற்றுள்ளது.

இந்த நிகழ்வில் தருமபுரம் வர்த்தக சங்கத் தலைவர் செ.புஸ்பராசா தலைமையில் இடம்பெற்றது.

இந்த நிகழ்வின் பொதுச்சுடரை மாவீரர் ஈழவேந்தனின் தாயார், மாவீரர் மலர்விழியின் பெற்றோர் ஆகியோர் ஏற்றிவைத்தனர்.

தமிழீழ தேசியக் கொடியை தருமபுரம் பிரதேச ஊரக வளர்ச்சிப் பொறுப்பாளர் செழியன் ஏற்றிவைத்தார். முன்பள்ளிக் கட்டடத்தை கிளிநொச்சி வலய உதவிக் கல்விப் பணிப்பாளர் நாடா வெட்டித் திறந்து வைத்தார்.

இந்த முன்பள்ளி - பிரதேச மக்களால் அமைக்கப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது.

## புனரமைப்பு

(கிளிநொச்சி)

நியாப்திட்டத்தின் கீழ் ஜெயபுரம் தெற்குக் கிராமத்தில் பொது மண்டபம், பொதுக்கிணறுகள் புனரமைப்புப்பணிகள் நடைபெற்று வருகின்றன.

இதேவேளை, இந்தக் கிராமத்துக்கான வீதிகளின் ஆரம்ப வேலைகள் மேற்கொளளப்பட்டு, பல மாதங்கள் ஆகின்றது. இதுவரையில் அதற்கான புனரமைப்பு வேலைகள் இடம்பெறவில்லை. மழை காலங்களில் இந்த வீதியால் பயணம் செய்யும் மக்கள் பெரும் சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

இது தொடர்பாக சம்மந்தப்பட்டவர்கள் கவனம் செலுத்துமாறு அந்தக் கிராம மக்கள் கேட்டுக் கொள்கின்றனர். (ஸ்ரீ)

## கிராமசேவையாளர் இல்லை

(யாழ்ப்பாணம்)

ஆனைவிழுந்தான் கிராமத்துக்கு நியமிக்கப்பட்ட கிராம சேவையாளர் இரண்டு மாதங்களாக கடமைக்குச் செல்லவில்லை.

இந்த நிலையில் மக்கள் தமது தேவைகளைப் பூர்த்திசெய்வதில் பெரும்சிரமத்தை எதிர்கொண்டு வருகின்றனர்.

இது தொடர்பாகச் சம்மந்தப்பட்டவர்கள் கவனம் செலுத்துமாறு அந்தக் கிராம மக்கள் கேட்டுக்கொண்டுள்ளனர்.

நமது ஈழநாடு
267, Navalar Road, Jaffna.
T.P. - 021-2225107 www.eezhanaadu.com

சிந்தனைக்கு
சூழ்ச்சி முடிவு துணிவுஎய்தல் அத்துணிவு
தாழ்ச்சியுள் தங்குதல் தீது.
திருக்குறள்

# நமது நோக்கு

## புலிகளுக்கு விரிக்கும் 'வலை'

இடைக்கால நிர்வாகசபை யோசனையை விடுதலைப் புலிகளிடம் சமர்ப்பிப்பதற்கான முயற்சிகளில் அரசாங்கம் இறங்கியிருக்கிறது.

சமாதான முயற்சிகளில் நடு நிலையாளராகப் பணியாற்றும் நோர்வே ஊடாக இந்த யோசனை புலிகளிடம் சமர்ப்பிக்கப்படவுள்ளது.

இதற்காக, அடுத்த சில வாரங்களில் நோர்வேயின் விசேட சமாதானத்தூதுவர் எரிக்சொல்ஹெய்ம் இலங்கை வரவுள்ளதாகவும், செய்திகள் வெளியாகியிருக்கின்றன.

விடுதலைப் புலிகளால் கடந்த வருடம் ஒக்ரோபர் மாதம் 31 ஆம் திகதி இடைக்கால நிர்வாக யோசனை தயாரிக்கப்பட்டு அரசாங்கத்திடம் ஒப்படைக்கப்பட்டு சுமார் ஒரு வருடங்கள் பூர்த்தியாகவுள்ள இந்தச் சூழலில்தான் - புலிகளின் யோசனைக்கு மாற்றான யோசனையை, அரசாங்கம் புலிகளிடம் சமர்ப்பிக்க விருப்பதான செய்தி வெளியிடப்பட்டுள்ளது.

புலிகளால் முன்வைக்கப்பட்ட யோசனையின் அடிப்படையில் பேச்சுக்களை நடத்துவதற்கு அரசாங்கம் முன்வராததால் தான் சமாதானப்பேச்சுக்களை மீள ஆரம்பிக்கும் முயற்சிகள் தொடர்ந்தும் இழுபட்டுச் சென்று கொண்டிருக்கிறன.

இந்த நிலையில் சமாதான நடவடிக்கைகளை மேலும் தாமதப்படுத்தும் நடவடிக்கையாகவே அரசாங்கம், இடைக்காலநிர்வாக யோசனை ஒன்றைத் தயாரித்தது.

இப்படிப்பட்டதொரு மாற்றுயோசனைகளை அரசாங்கம் தயாரிக்கிறதென - முன்னர் செய்திகள் வெளிவந்தபோதே புலிகள் தம்மால் ஒருபோதும் அதை ஏற்றுக் கொள்ளமுடியாது என நிராகரித்திருந்தனர்.

அரசாங்கத்தின் சார்பில் எந்தவொரு யோசனை தயாரிக்கப்பட்டு கையளிக்கப்பட்டாலும், அதை ஏற்றுக் கொண்டு பரிசீலனை செய்யப்போவதில்லையென்று விடுதலைப் புலிகளின் அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் பகிரங்கமாகவே அறிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

இதுவரை உரிய தீர்வுயோசனைகள் எதையும், முன்வைக்காத அரசாங்கம் -தமிழரின் உரிமைகளைத் தொடர்ந்து மறுத்துவரும் அரசாங்கத்திடமிருந்து நீதியான, நியாயமான தீர்வுயோசனையொன்றை எவ்வாறு எதிர்பார்க்கமுடியும்?

இதனால்தான் புலிகள் - அரசாங்கத்தரப்பிடம் இருந்து கிடைக்கக்கூடிய எந்தவொரு யோசனை குறித்தும் தாம் பரிசீலனை செய்யப்போவதில்லையென தெரிவித்திருந்தனர்.

ஆனாலும், அரசாங்கம் தனது மாற்றுயோசனையை -புலிகள ஏற்றுக்கொள்கிறார்களோ, இல்லையோ அதைக் கையளித்து விடுவது என்ற நிலைப்பாட்டில் இருப்பதாகத் தெரிகிறது.

புலிகள் கடந்தவருடம் தமது யோசனையை அரசிடம் சமர்ப்பித்துவிட்டு பேச்சுக்கு வாருங்கள் என்று அரசாங்கத்தைக் கோரிவருவது - இப்போது சர்வதேச ரீதியில் அரசின் பிரசாரத்துக்கு பெரிதும் நெருக்கடியாக இருக்கிறது.

இப்படிப்பட்ட நிலையில் - தாமும் ஒரு தீர்வுயோசனையை புலிகளிடம் கையளித்துவிட்டால், முழுப்பழியையும் புலிகள் மீது சுமத்திவிடலாம் என்று அரசாங்கம் எண்ணுவதுபோலவே தென்படுகிறது.

ஏனெனில், புலிகளின் இடைக்கால நிர்வாகத்தின் அடிப்படையில் எவ்வாறு பேச்சுக்களை நடத்துவது என்பது குறித்து ஆராயவே தேசிய ஆலோசனைச் சபையை அமைக்கப் போவதாக ஜனாதிபதி சந்திரிகா முன்னர் தெரிவித்திருந்தார்.

இதன்படி - கடந்தவாரம் எதிர்க்கட்சிகளின் எதிர்ப்பையும் மீறி, ஜனாதிபதி சந்திரிகா தேசிய ஆலோசனைச் சபையை அமைத்தும் விட்டார். இந்த ஆலோசனைச் சபையின் முடிவுகள் அறியப்படாமலேயே - புலிகளிடம் தமது பக்கயோசனையைச் சமர்ப்பிக்க ஜனாதிபதி சந்திரிகா முடிவுசெய்திருப்பது சந்தேகங்களையே ஏற்படுத்துகிறது.

தமதுயோசனையை புலிகளிடம் கொடுத்துவிட்டால், சரி யென்றும் பின்னர் காலத்தை கடத்துவது சுலபம், என்பதாலுமே ஜனாதிபதி சந்திரிகா இவ்வாறு தீர்மானம் எடுத்திருப்பதாக தெரிகிறது.

தேசிய ஆலோசனைசபை ஒருபுறம் இருக்க - புலிகளிடம் தமது இடைக்கால நிர்வாக யோசனையை சமர்ப்பித்து, சர்வதேச சமூகத்துக்கு தன்னை ஒரு நல்ல பிள்ளையாகக்காட்டவே முற்படுகிறார் என்பது மட்டும் தெளிவாகிறது.

ஜனாதிபதி சந்திரிகா புலிகளை நோக்கி வீசிக்கும் இன்னொரு வலையாகவே இதைக் கருதலாம். விடுதலைப் புலிகள் இந்த வலைக்குள் இலகுவாக சிக்கி விடுவர் என்று ஜனாதிபதி எதிர்பார்த்தால் அது அவரது தவறான கணிப்பாகவே இருக்கும் என்பதில் சந்தேகமில்லை.

## நாடும் நடப்பும்




# போரினால் பாதிக்கப்பட்ட பெண்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்தத்திட்டம்

## கிராமரீதியாக சேமிப்புத்திட்டம் ஆரம்பம்

யாழ். குடாநாட்டிலுள்ள போரினால் பாதிக்கப்பட்ட கிராமங்களில் வாழும் பெண்களின் வாழ்க்கைத்தரத்தை மேம்படுத்துவதற்கான நோக்கத்தை அடிப்படையாகக் கொண்டு, யாழ்.மாவட்ட பெண்கள் அபிவிருத்தி நிறுவனத்தால் சேமிப்புத் திட்டம் ஒன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இந்தத் திட்டம் முதற்கட்டமாகக் கைதடி, நாவற்துறை, வேலணை, சண்டிலிப்பாய் ஆகிய கிராமங்களில் அமுல் செய்யப்பட்டுள்ளது.

இதனடிப்படையில், ஒவ்வொரு கிராமத்திலும் 40 பெண்கள் தெரிவு செய்யப்பட்டு, அவர்கள் மாதாந்த வருமானத்திலிருந்து 200 ரூபாவை வங்கியில் வைப்புச் செய்ய, அதேயளவு தொகையைத் திட்டத்தின் கீழ் உள்வாங்கப்பட்டுள்ள பெண்களின் வங்கிக்கு யாழ். மாவட்ட அபிவிருத்தி நிறுவனம் வழங்குகிறது.

போரினால், பாதிக்கப்பட்ட பிரதேச பெண்களின் பொருளாதாரத்தை மேம்படுத்தும் நோக்கத்துடனேயே இந்தத் திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகப் பெண்கள் அபிவிருத்தி நிறுவனம் தெரிவித்துள்ளது.

இதேவேளை - இந்தப் பெண்களின் வாழ்க்கைத்தரத்தை மேம்படுத்த மேலும் பல திட்டங்கள் அறிமுகப்படுத்தப்படவுள்ளதாகத் தெரியவருகிறது. (17)

## பதவியிலிருந்து விலகினாலும் கட்சியுடன் சேர்ந்து செயற்படுவேன்

### சுமங்கல தேரர் தெரிவிப்பு

ஜாதிக ஹெல உறுமயவின் நாடாளுமன்ற உறுப்பினர் பதவியில் இருந்து விலகியுள்ளபோதும், அந்தக் கட்சியுடன் சேர்ந்து செயற்படப் போவதாக கொலன்னாவ ஸ்ரீ சுமங்கல தேரர் தெரிவித்தார்.

நாடாளுமன்ற உறுப்பினர் பதவியிலிருந்து விலகியது தொடர்பாகக் கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

பௌத்த இராஜ்ஜியத்துக்குள் நாட்டு மக்களின் விருப்பு வெறுப்புக்களை பிரதிபலிக்கும் வகையில் நாடாளுமன்றத்தில் உறுப்பினர்கள் செயற்படாமை கவலையான விடயமாகும்.

எனினும், நாடாளுமன்றத்தில் இடம்பெற்ற நடவடிக்கைகள் எனது பதவி விலகலுக்கும் காரணமாக அமையவில்லை.

அதிகாரத்தை ஒருபுறம் கலைத்துவிட்டு, குறிக்கோளை நிறைவேற்றவே நான் செல்கின்றேன். ஹெல உறுமயவுக்கு எந்தவகையிலும் நான் ஆதரவு வழங்குவேன் எனத் தெரிவித்தார்.

## வீடமைப்புத் திட்ட காணிகளை முறைப்படி வழங்க நடவடிக்கை

தென்மராட்சிப் பகுதிகளிலுள்ள மிருசுவில் படித்த மகளிர் வீடமைப்புத் திட்டம் மற்றும் மந்துவில் வேலைவரைக்காடு வீடமைப்புத்திட்டக் காணிகளை முறைப்படி வழங்குவதற்கு காணி அலுவலகத்தால் இடம் பெயர் சேவை நடத்தப்படவுள்ளது.

மிருசுவில் படித்த மகளிர் வீடமைப்புத்திட்டத்துக்கான இடம்பெயர் சேவை - எழுதுமட்டுவாள் வடக்குக் கிராம உத்தியோகத்தர் அலுவலகத்தில் இன்று நடைபெறவுள்ளது.

இதற்குரிய பயனாளிகள் - ஆவணங்களை எடுத்து வரும்படியும் பணிக்கப்பட்டுள்ளனர். தேசிய அடையாள அட்டை, உள் உணவு நிவாரண அட்டை, வருமானத்தை உறுதிப்படுத்தும் ஆவணம், தற்போது தங்களிடம் காணி, வீடு இல்லையென்பதை உறுதிப்படுத்தும் கிராம அலுவலரின் கடிதத்துடன் குறிப்பிட்ட திகதிகளில் வரும்படி அறிவிக்கப்பட்டுள்ளது. (17)

### நவம்பர் 5 ஆம் திகதியை

# தேசிய அழகியல் தினமாக அனுஷ்டிக்குமாறு அதிபர்களுக்கு கல்வி அமைச்சு அறிவிப்பு

அரசாங்கப் பாடசாலைகளில் எதிர்வரும் நவம்பர் மாதம் 5 ஆம் திகதி "தேசிய அழகியல்" தினத்தை கொண்டாடும்படி, கல்வி அமைச்சின் செயலாளர் - கலாநிதி தாரா டிமெல் சகல பாடசாலை அதிபர்களுக்கும் சுற்று நிருபம் மூலம் அறிவித்துள்ளார்.

தேசிய புனரமைப்பின் அடிப்படையான அழகியல் - சகல சமூகத்தினரதும் இதயம்போல் போற்றப்படும். இன்று அநேகமாக கேட்டல், பார்த்தல் ஊடகங்களில் அழகியல் இரசனையை அனுபவிக்க சமர்ப்பிக்கும் சங்கீதம், நாட்டியம் ஆகிய ஆக்கங்களின் விசேடங்களும், பெறுமதியும் சாஸ்திர ரீதியான அபிவிருத்தி அடைந்த தேசிய அடையாளத்தை வெளிப்படுத்தும் பெறுமதிமிக்க கலாசார, முதிசமான அழகியல் விடயம் - அடுத்த தலைமுறைக்கு கிடைக்குமா என்ற நிச்சயமற்ற தன்மை ஏற்பட்டுள்ளது.

இதன்படி எதிர்கால மாணவர் சமூகம் தாயக தனித்துவத்தையும், கலாசார பெறுமதியையும் பெறக்கூடியதாக அழகியல் விடயம், மிகப் பாதுகாப்பாகப் போற்ற வேண்டியது எங்களது தலையாய கடமையாகும்.

இதனை அபிவிருத்தி செய்யும் பொருட்டு, பாடசாலைகளில் இந்தத் தினம் கொண்டாடப்படவுள்ளது. (122)

## உள்நாட்டு விமான சேவைகளுக்கான கட்டணம் 2 ஆயிரம் ரூபாவால் அதிகரிப்பு

உலக வர்த்தக சந்தையில் நிலவுகின்ற எரிபொருள்களின் விலை அதிகரிப்பால் - உள்நாட்டு விமான சேவைகளின் கட்டணங்களையும் 2 ஆயிரம் ரூபாவால் அதிகரிக்க வேண்டிய தேவை ஏற்பட்டுள்ளதாக, விமான சேவை கம்பனிகளால் சிவில் விமான சேவைக்கு ஆலோசனை சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

இதன்படி உள்நாட்டு விமான சேவைகள் இடம்பெற்று வரும் யாழ்ப்பாணம், திருகோணமலை, கொழும்பு, சிகிரியா, ஹக்கல ஆகிய இடங்களுக்கான விமானப் பயணக் கட்டணங்கள் அதிகரிக்கப்படவுள்ளன.

விமானப் பயணக் கம்பனிகளால் விடுவிக்கப்பட்டுள்ள இந்த வேண்டுகோள் நியாயமானதாக இருப்பதால், அதற்கு அனுமதி வழங்குவதற்கு சிவில் விமான சேவை அதிகார சபை தீர்மானித்துள்ளது.

உள்நாட்டு விமான சேவைகளை நடத்தும் 5 விமானப் பயணக் கம்பனிகள் மூலம் இந்த வேண்டுகோள் விடுக்கப்பட்டிருந்தது.

### உயர்தரப் பரீட்சையில்

## திறமைச் சித்திபெற்ற மாணவர்கள் 40 பேருக்கு கன்னங்கர விருது

நடைபெற்று முடிந்த க.பொ.த உயர்தரப் பரீட்சையில் திறமைச் சித்தியெய்திய மாணவர்களுக்கு கலாநிதி சி. டபிள்யூ.டபிள்யூ கன்னங்கர விருது வழங்கும் நிகழ்வு நாளை மறுதினம் மு.ப 11 மணிக்கு ஜனாதிபதி சந்திரிகா தலைமையில் ஜனாதிபதி மாளிகையில் இடம் பெறவுள்ளது.

இந்த நிகழ்வில் சகல துறைகளுக்கும் 2004 ஆம் ஆண்டு க.பொ.த உயர்தரப் பரீட்சையில் திறமைச்சித்தியெய்திய 40 மாணவர்களுக்கும், அந்த மாணவர்களுக்குப் பிரதான பாடங்களை கற்பித்த ஆசிரியர்களுக்கும், அவர்களது திறமையை மதிப்பிடும் வகையில் மாணவர்களுக்குத் தங்கப் பதக்கமும், சான்றிதழ்களும் - ஆசிரியர்களுக்கு சான்றிதழும் வழங்கிக் கௌரவிக்க கல்வி அமைச்சு தீர்மானித்துள்ளது. (91)

வாரநோக்கு -யாழவன்

# மணிகட்டிய மாடாக உருவெடுத்துள்ள தேசிய சமாதான ஆலோசனைச் சபை

தற்போது தடைப்பட்டுள்ள சமாதானப் பேச்சுவார்த்தைகளையும், அது தொடர்பாக மேற்கொண்ட நகர்வுகளையும் இனிவரும் காலங்களிலே சிறப்பான முறையிலே நகர்த்துவதற்கெனவே ஜனாதிபதி தேசிய சமா



தானத்துக்கும், நல்லெண்ணத்துக்குமான ஆணைக் குழுவை ஸ்தாபித்துள்ளதாக, அரசதரப்பிலிருந்து கருத்துக்கள் வெளியிடப்பட்டு வருகின்றன.

ஆனால், அதேவேளை - இலங்கை அரசியலின் இரண்டாம் அணியான, ஐக்கிய தேசியக் கட்சி சமாதானப் பேச்சுவார்த்தைகளின் முக்கிய தரப்பினரான விடுதலைப் புலிகளும், ஜனாதிபதியின் புதிய ஆணைக்குழு தொடர்பாக எதிர்மறையான கருத்துக்களையே வெளியிட்டு வருகின்றனர்.

இவ்வாறு எதிர்மறையான கருத்துக்களை வெளியிடுவோரில் - ஒரு தரப்பினர் ஜனாதிபதியின் இந்த நடவடிக்கை அவசியமற்றது எனவும், இன்னொரு தரப்பினர் இந்த ஆணைக்குழு தொடர்பாக தமக்கு நம்பிக்கையில்லையெனவும், கருத்து வெளியிட்டு வருகின்றனர்.

இவர்களது கருத்துக்களில் நிறையவே ஆதங்கங்களும், ஆய்வுக்குரிய விடயங்களும் அடங்கியுள்ளன.

இவை தொடர்பாக ஆராய்வதே இன்று சாலப் பொருத்தமானதாக இருக்கும்.

அண்மையில் ஜனாதிபதி தான் வகித்து வந்த - ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் தலைமைப் பதவியை திடீரென இராஜினாமாச் செய்தார்.

அப்போது ஜனாதிபதி சமாதான நகர்வுகள் தொடர்பாக, ஆக்கபூர்வமான நடவடிக்கைகளை எடுப்பதற்காகவே இந்த முடிவை எடுத்ததாக அவரது தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

ஆனால், இன்று வரை அவ்வாறான எத்தகையதோர் முன்னேற்றகரமான நடவடிக்கையும் எடுக்கப்பட்டதாகத் தெரியவில்லை.

இந்த நிலையில் தற்போது அமைக்கப்பட்டுள்ள சமாதானத்துக்கும், நல்லெண்ணத்துக்குமான ஆணைக்குழுவை நியமித்ததன் மூலமாகவும் ஜனாதிபதி சமாதானப் பாதையிலுள்ள தடைகளை அகற்றி அந்த பாதையை சீராக்க முனைகிறார் எனப் பேசப்படுகிறது.

ஆனால், இதில் எதுவிதமான உண்மையுமேல்லை. உண்மை எதுவாக இருக்கின்றது எனின், தனது முன்னைய ஆளும் கூட்டணியின் தலைமைப் பதவியை தனது சுயகௌரவத்தைப் பாதுகாப்பதற்காகத் தான் பதவியைத் துறந்தார்.

தற்போது தனது கட்சியின் கௌரவத்தைப் பாதுகாத்து ஆட்சியைத் தொடர்ந்து தக்கவைப்பதற்காக சமாதான ஆணைக் குழுவை நியமித்தார்.

இதுவே உண்மையாகும். இந்தக் கருத்து எழுவதற்கான பிரதான காரணம், சந்திரிகா என்றுமே சமாதானத்தை விரும்பியவராக இல்லாமலிருப்பது தான்.

1994 ஆம் ஆண்டு தேர்தலின் போது சமாதானத்தைப் பிரசாரப்பொருளாக்கி, வாக்குவேட்டையில் ஈடுபட்டுபின்னர்பிரதமராகி அதன் பின்ஜனாதிபதியாகி பின்னர் வெறும் அதிகாரிகள் மட்டத்திலான சமாதானப் பேச்சுவார்த்தைகளை நடத்தி அதனையும் இடை நடுவில் முறித்து மீண்டும் போரைத் தொடங்கி அதில் குறிப்பிடத்தக்க வெற்றியையும் சந்திரிகா கண்டார்.

இதேபாணியிலே கடந்த தேர்தல்களின் போதும் ரணில் தலைமையிலான அரசின் சமாதான முயற்சிகள் நாட்டைத் தவறான வழிக்குள் இட்டுச் செல்வதாகக் குற்றம் சாட்டி பொய்யான, போலியான பல வாக்குறுதிகளை அள்ளி வீசி, அப்பாவி சிங்கள மக்களின் வாக்குகளை சுவீகரித்து மீண்டும் ஆட்சியைக் கைப்பற்றியுள்ளார் சந்திரிகா. இப்போது அவருக்கு தேவையாகவுள்ளது. சாட்டுக்கு ஒரு சமாதானப் பேச்சுவார்த்தை பின் அதனை முறித்துப் போரைத் தொடங்குவது. இதுவே சந்திரிகாவின் திட்டமாகும்.

நிறைவேற்று அதிகார பலத்தோடு கூடிய ஆட்சியை தன் கையிலே வைத்துள்ள சந்திரிகா அதன் மூலம் சாதிக்க முடியாத சமாதான வெற்றியை, சமாதானத்துக்கான ஆணைக்குழு மூலமாக சாதிப்பதற்கு முயல்வது தான் வேடிக்கையாகவுள்ளது.

சந்திரிகாவினுடைய காலத்திலே முன்னெடுக்கப்பட்ட சமாதான நகர்வுகளின் போதெல்லாம் அவரது கையிலே நிறைவேற்று அதிகாரப் பலம் குறைந்தது. அதனைப் பாவித்து சமாதான நகர்வுகளை சரியான திசைக்கு இட்டுச் சென்றிருக்க முடியும். இட்டுச் செல்ல முடியும்.

ஆனால், அதைவிடுத்து அவர் போரை மீள ஆரம்பிப்பதற்காகவும், நாடாளுமன்றத்தை அரைகுறை ஆயுளோடு கலைத்து ஆட்சியை கைப்பற்றுவதற்காகவும் பயன்படுத்தினாரே தவிர எந்தவிதமான, உருப்படியான விடயங்களுக்குமாக அதனைப் பயன்படுத்த முயலவில்லை.

அதற்கு அவரது சகாக்களும் இடம் கொடுக்கவில்லை. இவ்வாறான மனப்பாங்கு கொண்ட சந்திரிகா - சமாதான ஆணைக்குழு மூலமாக எதனைச் சாதிக்க முயல்கிறார் என்பதை தற்போது தெளிவாகக் கூறமுடியாவிட்டாலும், ஒன்றை மட்டும் தெளிவாகப் புரிந்துகொள்ளக் கூடியதாகவுள்ளது.

அதாவது, விடுதலைப் புலிகளால் சமர்ப்பிக்கப்பட்ட இடைக்கால நிர்வாக வரைபின் அடிப்படையிலேயே, சமாதானப் பேச்சுவார்த்தைகள் மீள ஆரம்பிக்கப்பட வேண்டுமெனக் கோரிக்கைகள் விடுக்கப்பட்டு வரும் வேளையில் - அதனடிப்படையல் பேச்சுவார்த்தைகளை நடத்துவதற்கு சந்திரிகா தலைமையிலான கூட்டணியினருக்கு சிறிதும் விருப்பமில்லை.



இதனால், எப்பாடுபட்டாவது விடுதலைப் புலிகளின் இடைக்கால நிர்வாக வரைபை இல்லாததொழிக்க வேண்டும். பின் இறுதித் தீர்வு தொடர்பாகப் பேசுவதாகக் கூறி, தமிழர்கள் ஏற்றுக்கொள்ள முடியாதவிடயங்களைப் பேசவேண்டும்.

இதனால், சமாதானப் பேச்சுவார்த்தைகள் இடைநடுவிலே முறியவேண்டும். அதனைப் பொருட்டாக வைத்து மீண்டும் போரை ஆரம்பித்து, உலக அரசுகளின் உதவியுடன் விடுதலைப் புலிகளை அடக்க வேண்டுமெனவுமே ஜனாதிபதி திட்டம் தீட்டுகிறார்.

இதனாலேயே இடைக்கால நிர்வாக வரைபை நிராகரிக்கும் பணியை எதிர்காலத்திலே மேற்கொண்ட ஆணைக் குழுவிடம் ஒப்படைப்பார்.

அந்த ஆணைக் குழுவும் தாம் புதிதாக எதையோ கண்டுபிடித்து விட்டது போல, அறிக்கைக்கு மேல் அறிக்கைகளை ஆங்கிலத்தில் வெளியிட்டு, இடைக்கால நிர்வாக யோசனை சமாதான பேச்சுவார்த்தைக்குத் தடையாக அமையுமெனப் பிரசாரப்படுத்தி, அதன் மூலம் வெறும் அறிக்கைகளையே உண்மையென நம்பும் சில சர்வதேச அரசுகளினுடைய காதிலே பூச் சுற்றி, அவர்கள் வழங்கும் ஆயுத, தளபாட உதவிகளைப் பெற்றுபோரை நடாத்துவதே சந்திரிகாவின் திட்டமாகவுள்ளது.

'சும்மா மாடு சொன்னால் கேளாது மணி கட்டிய மாடு சொன்னால் கேட்கும்' என்பது போல, மணி கட்டிய சில மாடுகள் சிங்கள அரசியல்வாதிகளுக்கு இடைக்கால நிர்வாக வரைபு தொடர்பாக, எதிர் விளக்கமொன்றை வழங்கவுள்ளனர்.

இதன் ஊடாகத் தனது காயை சந்திரிகா நகர்த்த முயல்கிறார்.



அத்துடன், தற்போதும் நிலவும் பொருளாதார நெருக்கடிகள், விலைவாசியேற்றங்கள் என்பன தொடர்பாக நாட்டிலே எழுந்துள்ள நெருக்கடி நிலையைத் தடுப்பதற்காகவும், மக்கள் தனது ஆட்சிக்கு எதிராக ஆர்ப்பாட்டம் செய்வதைக் குறைப்பதறகாகவும், சாமாதான நல்லெண்ண ஆணைக்குழுவைப் பயன்படுத்தவுள்ளார் ஜனாதிபதி. இதுவே இந்த ஆணைக் குழு நியமிக்கப்பட்டதன் முக்கிய நோக்கமாகும்.

இலங்கை அரசினால், இது வரை அமைக்கப்பட்ட எந்த ஆணைக்குழுவுமே தனது கடமைகளைச் செவ்வனே நிறைவேற்றியதாக வரலாறேயில்லை.

காணாமற்போனவர்கள் தொடர்பாக ஆராய்வதற்கு என, ஒரு ஆணைக்குழுவும், அரச ஊழியர்களின் சம்பள முரண்பாடுகள் தொடர்பாக ஆராய இன்னொரு ஆணைக்குழுவும், படுகொலைகள், விசாரணைகள் தொடர்பாக ஆராய இன்னொரு ஆணைக்குழுவும், மனித உரிமைகளைப் பாதுகாக்க இன்னொரு ஆணைக் குழுவுமென ஆயிரம் ஆணைக்குழுக்களை அமைத்தமைதான் இதுவரை கண்ட மிச்சம்.

இந்த ஆணைக்குழுக்கள் தமது பணிகளைச் செவ்வனே நிறைவேற்றுவதற்கு அரச தரப்பினர் பலரும் இடையூறாக இருந்து வந்துள்ளனர்.

அண்மையில்கூட விசாரணையொன்றுக்காக யாழ். பொலிஸ் நிலையத்துக்கு சென்றிருந்த மனித உரிமைகள் ஆணைக் குழு அதிகாரிகள் பொலிஸாரால் மோசமாக தாக்கப்பட்டிருந்தனர்.

இவ்வாறு ஆணைக்குழுக்களின் செயற்பாடுகளை முடக்குவது என்பது அரச தரப்பினருக்கு கைவந்த கலை. இவ்வாறானதொரு நிலையில் சமாதான ஆணைக்குழு சகதிக்குள் அகப்பட்ட யானையாகவே செயற்பட முனையும்.

தேசிய சமாதானத்துக்கும், நல்லெண்ணத்துக்குமான ஆலோசனைச் சபையெனும் பெயரில் நிறுவப்பட்டுள்ள இந்த ஆணைக் குழுவானது (கவுன்சில்) வெறும் ஆலோசனைகளை வழங்கும் ஒரு அமைப்பாகவே செயற்படப்போகிறது.

முடிவுகளை எடுக்கும் அதிகாரமானது- எப்போதும் ஜனாதிபதியின் கைகளிலேயே இருக்கப்போகிறது. எனவே மீண்டும் மீண்டும் சமாதானப் பேச்சுவார்த்தை விடயங்களிலே இறுக்கங்கள் ஏற்படப்போவது வழமையே!

இதேவேளையில் - விடுதலைப் புலிகளும் தமது உயர்மட்ட அரசியற்குழுக் கூட்டத்தை ஜெனிவாவிலே நடாத்தி, அதன் மூலமாக பல தீர்க்கமான முடிவுகளை எட்டியுள்ளனர்.

மிக விரைவிலே தலைமைப் பீடம் மூலமாகப் பொதுமக்களுக்கு அந்த முடிவுகள் தொடர்பான விளக்கங்கள் அளிக்கப்படவுமுள்ளன. இத்துடன், இந்த உயர்மட்ட அரசியற் குழுவினர் உலகின் பல நாடுகளுக்கும் சென்று, அங்கு அரசியற் தலைவர்களைச் சந்தித்து, தமது நிலைப்பாட்டை விளக்கி வருகின்றனர்.

தொடரும் அரசியற் படுகொலைகளுக்கு விடுதலைப் புலிகளையே காரணம் காட்ட முயன்று, அதன் ஊடாகப் புலிகள் யுத்த நிறுத்த ஒப்பந்தத்தை மீறிவிட்டார்கள் எனப் பிரசாரப்படுத்தி, ஒரு எதிர்ப்புணர்வைப் பரப்ப அரசு திட்டமிட்டு செயற்பட்டுவருகிறது.

அண்மையிலும் - மன்னார் மாவட்டத்தில் முஸ்லிம் வர்த்தகர் ஒருவர் கொலை செய்யப்பட்ட சம்பவத்துக்கு, விடுதலைப் புலிகளே காரணம் எனக் கூறி, பல அனர்த்தங்களை விளைவித்து அரசியல் லாபம் தேட முயன்றுள்ளனர் சிலர்.

கொலை செய்யப்பட்ட நபர் போதைப் பொருள் கடத்துவதிலே தொடர்புடையவர் எனவும், கொலை செய்யப்பட்ட போதுகூட அவர் வசம் அறுபது லட்சம் பெறுமதியான போதைப் பொருள் இருந்ததாகவும் கண்டறியப்பட்டுள்ளது.

எனவே, ஒரு சமூக விரோதியின் கொலையை இரு இனங்களுக்கு இடையிலான முரண்பாடாக சித்திரித்து, அவ்விரு இனங்களையும் மோதவிட்டு வேடிக்கை பார்ப்பதே ஆட்சியாளர்களின் எண்ணமாகும்.

இதனை உணராத அப்பாவிப் பொது மக்கள் தமக்குள்ளே மோதிக் கொள்கிறார்கள்.

போர் நடைபெற்றபோது கடைப்பிடித்த அவதான உணர்வை காட்டிலும், தற்போதே பொதுமக்கள் மிக அவதானமாக செயற்பட வேண்டியது அவசியமாகும்.

சமூக விரோதிகளின் செயற்பாடுகள் ஒரு புறமும், அதனைத் தூண்டி வளரும் தலைமுறையை அழிக்கும் அரச தரப்பு ஒரு புறமும் எனப் பல்வேறு முகங்களில் வரும் நெருக்கடிக்கு மக்கள் இன்று முகம் கொடுக்க வேண்டியவர்களாகவுள்ளனர்.

மொழியால் ஒன்றுபட்டுள்ள இரு சமூகத்தினரிடையே பிளவுகளைத் தோற்றுவிப்பதன் மூலமாக, தமது அரசியல் வாழ்வை வளப்படுத்த துணியும் ஆட்சியாளர்களுக்கு இரு இன பொதுமக்களும் இணைந்து, நல்ல பாடத்தைப் புகட்ட வேண்டும்.

அவ்வாறானதொரு நிலை தோன்றுமாக இருந்தால், சமாதான ஆலோசனைச்சபை இன்றியே சமாதான நகர்வுகள் வெற்றி இலக்கை நோக்கி நகரும் என்பது திண்ணம்.

இன்று தென்னிலங்கையில் பொது மக்கள் அரசுக்கு எதிராக வீதிக்கு இறங்கிப் போராட்டம் நடாத்தத் தொடங்கிவிட்டனர்.

அந்தப் போராட்டங்களினூடு வெளிப்படும் மக்களின் எதிர்புணர்வுகளை சமன் செய்வதற்காகவும், சமாளிப்பதற்காகவும் உருவாக்கப்பட்டுள்ள தேசிய சமாதான ஆலோசனைச் சபையினுடைய ஆலோசனைகள் அவசியமானவையாக இருக்குமா? அல்லது அர்த்தமற்றவையாக இருக்குமா? என்பதைப் பொறுத்தே பார்க்கவேண்டும். ◆

யாழ்ப்பாணம்

# ஈராக்கின் தலைநகர் பாக்தாத்தில் எரிபொருள் அமைச்சு கட்டடம் மீது றொக்கட் தாக்குதல்; நால்வர் பலி!



(பாக்தாத்)

ஈராக்கின் தலைநகர் பக்தாத்திலுள்ள எரிபொருள் அமைச்சு கட்டடத்தின் மீது கிளர்ச்சிவாதிகள் மேற்கொண்ட றொக்கட் தாக்குதலில் குறைந்தது நால்வர் கொல்லப்பட்டனர்.

இந்தத் தாக்குதல், அமெரிக்காவின் பாதுகாப்புச் செயலர் டொனால்ட் ரம்ஸ்பீல்ட் ஈராக்கின் அல் - அன்பர் மாகாணத்திற்கு உத்தியோகபூர்வமற்ற விஜயமொன்றை மேற்கொண்டிருந்த வேளை நடத்தப்பட்டுள்ளது.

அடுத்தவருடம் ஈராக்கில் தேர்தல் நடைபெறவுள்ள நிலையில், ஈராக்கிலிருந்து அமெரிக்கப்படைகளைக் குறைப்பதற்கான சாத்தியங்கள் எதுவுமில்லையென ரம்ஸ்பீல்ட் தெரிவித்தார்.

இதேவேளை, தலைநகர் பாக்தாத்திலுள்ள எரிபொருள் அமைச்சுக் கட்டடத்திற்கருகில் பொலிஸாரின் பயிற்சி முகாமொன்று உள்ளதாகவும், இதனை இலக்கு வைத்தே கிளர்ச்சிவாதிகள் றொக்கட் தாக்குதலை நடத்தியிருக்கலாமெனவும் தெரிவிக்கப்படுகிறது.

இந்தத் தாக்குதலில் கொல்லப்பட்டவர்களில் பொலிஸ் படைக்கு இணைக்கப்பட்டவர்களும் அடங்குவதாக பொலிஸாரை மேற்கோள்காட்டி ஏ.பி செய்தி நிறுவனம் தெரிவித்தது.

பாக்தாத்தின் கலாசார அமைச்சுக்கு அருகே இடம்பெற்ற மற்றொரு சம்பவத்தில் தற்கொலைக் குண்டுதாரி தன்னைத்தானே வெடிக்க வைத்து உயிரிழந்தார். இதன்போது அருகில் சென்றுகொண்டிருந்த பாதசாரிகள் சிலரும் காயமடைந்தனர்.

அல் - அன்பர் மாகாணத்தில் உள்ள 1500 அமெரிக்க கடற்படையினருக்கு முன்னால் உரையாற்றிய ரம்ஸ்பீல்ட், ஈராக்கில் தற்போதுள்ள இக்கட்டான நிலையிலும் நாம் இங்கு வருவதென்பது திருப்தியளிக்கக்கூடிய வகையில் உள்ளது.

அத்துடன் அடுத்தவருடம் ஈராக்கில் தேர்தல் நடைபெறவுள்ள நிலையில், அமெரிக்கப் படைகளின எண்ணிக்கையைக் குறைக்கும் நோக்கம் இல்லை. ஆனாலும், ஈராக்கில் படைகளுக்கு புதிதாக சேர்க்கப்படுபவர்கள் தமது பயிற்சியை நிறைவு செய்த பின்னர் படைகளில் இணைக்கப்படும் வேளை, அவர்கள் அமெரிக்கப் படைகளின் வேலைப்பளுவைக் குறைக்க உதவுவார்கள் எனத் தெரிவித்தார்.

ஈராக்கின் அல் - அன்பர் மாகாணத்திற்கு அமெரிக்க பாதுகாப்புச் செயலர் விஜயம் செய்தது இதுவே முதற்தடவையாகும்.

அமெரிக்கப் பாதுகாப்புச் செயலர் ரம்ஸ்பீல்ட் இந்த மாகாணத்திற்கு விஜயம் செய்ததன் நோக்கம் அங்கு இராணுவ அதிகாரிகளைச் சந்திப்பதற்கும், தேர்தலுக்கு முன்னர் பாதுகாப்பு ஏற்பாடுகள் எவ்வாறுள்ளன என்பதை அவதானிப்பதற்காகவுமே என ரம்ஸ்பீல்டின் பேச்சாளர் தெரிவித்தார்.



ஈராக்கிற்கு செல்லமுன்னர் ரம்ஸ்பீல்ட், ஈராக்கில் நிலைகொண்டுள்ள பல்வேறு நாட்டு இராணுவங்களின் பாதுகாப்பு அமைச்சர்களையும் சந்தித்துக் கலந்துரையாடியுள்ளார்.

இந்தச் சந்திப்பில் ஈராக்கில் அடுத்த வருடம் தேர்தல் நடைபெறவுள்ள நிலையில், அங்கு பாதுகாப்பினை அதிகரிக்கவேண்டியுள்ளதாகவும், எனவே அங்கு மேலதிகமாக படைகளை அனுப்பவேண்டியுள்ளதாகவும் தெரிவித்தார்.

# பாகிஸ்தான் மதத்தலைவர் ஒருவர் ஆயுதபாணிகளால் சுட்டுக்கொலை

## பள்ளிவாசலிலும் தற்கொலை குண்டுத்தாக்குதல்



பாகிஸ்தானின் சுனி இன மதத் தலைவரும், அவரது உதவியாளரும் கராச்சியில் சென்று கொண்டிருந்த சமயம் இனந்தெரியாத ஆயுதபாணிகளால் சுட்டுக்கொல்லப்பட்டனர்.

முப்தி முகமட் ஜமீல் மற்றும் அவரது உதவியாளரான நசீர் அகமட் ஆகிய இருவருமே சுட்டுக் கொல்லப்பட்டவர்களாவர்.

இவர்கள் இருவரும் தமது வீட்டை நோக்கி காரில் சென்று கொண்டிருந்தவேளை, இரண்டு ஆயுதபாணிகள் காரை வழிமறித்து இவர்கள் மீது கண்மூடித்தனமான துப்பாக்கிப் பிரயோகத்தை மேற்கொண்டதாக பாகிஸ்தானின் உயர் பொலிஸ் அதிகாரியொருவர் தெரிவித்தார்.

இந்தத் தாக்குதலுக்கு எவரும் உரிமை கோரவில்லை. இந்தத் தாக்குதலை குறித்த ஒரு குழுவே நடத்தியிருக்கவேண்டுமென கராச்சியிலுள்ள அதிகாரிகள் தெரிவித்தனர். தாக்குதலை மேற்கொண்ட பின்னர் இவர்கள் இருவரும் வைத்தியசாலைக்கு எடுத்துச்செல்லும் வழியிலேயே உயிரிழந்ததாகத் தெரிவிக்கப்படுகிறது.

கடந்த வாரம் பாகிஸ்தானில் இடம்பெற்ற இருவேறு குண்டு வெடிபபுக்களில் 70 பேர் உயிரிழந்ததைத் தொடர்ந்து, பாகிஸ்தானில் அதிகாரிகள் பாதுகாப்பைப் பலப்படுத்தியிருந்ததுடன், மதக்குழுக்களால் நடத்தப்படும் அரசியல் கூட்டங்களுக்கும் தடைவிதித்திருந்தனர்.

ஆனால், இவர்களின் இந்த நடவடிக்கைகளால் இஸ்லாமியக் குழுக்கள் எதுவும் பாதிக்கப்படவில்லையென்பதையே அவர்களின் இந்தத் தாக்குதல் காட்டுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை - பாகிஸ்தானின் கிழக்குப் பகுதி நகரில் அமைந்துள்ள சியா முஸ்லிம்களுக்குச் சொந்தமான பள்ளிவாசல் ஒன்றில் இடம்பெற்ற தற்கொலைக் குண்டுத்தாக்குதலில் 2 படையினர் உட்பட நால்வர் கொல்லப்பட்டதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

## படுகொலைகளுடன் தொடர்புடைய

# சேர்பிய முன்னாள் இராணுவ அதிகாரி நீதிமன்றத்தில் சரணடைந்துள்ளார்!

சொ்பேர்னிக்கா என்ற இடத்தில் நடந்த இனப் படுகொலைகளுடன் தொடர்புடைய பொஸ்னிய, சேர்பிய இராணுவத்தின் முன்னாள் சிரேஷ்ட அதிகாரி ஒருவர் சேர்பிய குற்றவியல் நீதிமன்றத்தில் சரணைடைந்துள்ளார்.

லியுபிசா பியேறா என்ற முன்னாள் பொஸ்னிய இராணுவ அதிகாரி 1995 ஆம் ஆண்டு செர்பேர்னிக்காவில் இடம்பெற்ற இனப் படுகொலைகளுடன் தொடர்புடையவர் என்ற குற்றச்சாட்டின்பேரில் கடந்த இரு வருடங்களாக சேர்பிய குற்றவியல் நீதிமன்றினால் தேடப்பட்டு வந்தார்.

இந்த நிலையில் இவர் தானாக முன்வந்து சரணடைந்துள்ளதாக, சேர்பிய மற்றும் மொன்ரினிகுறோ அரசாங்கங்கள் தெரிவித்துள்ளன.





பொஸ்னிய இராணுவத்தின் உயர்மட்ட அதிகாரியான பியேறா போல்கன் யுத்தத்தின்போது போர்க் கைதிகளுக்குப் பொறுப்பாகவும் இருந்தார்.

போல்கன் யுத்தத்தின்போது - செர்பேர்னிக்காவைச் சேர்ந்த 7500 முஸ்லிம் ஆண்களும், சிறுவர்களும் படுகொலை செய்யப்பட்டனர்.

இந்த இனப் படுகொலைகளுக்கும் பியேறாவுக்கும் தொடர்பு இருப்பதாக - கடந்த 2002 ஆம் ஆண்டு குற்றம் சாட்டப்பட்டிருந்தது.

முஸ்லிம் பெண்கள் மற்றும் சிறுவர்களைப் பலவந்தமாக நாடு கடத்தினார் எனக் குற்றஞ்சாட்டப்பட்ட பியேறா கடந்த இரண்டு வருடங்களாக தலைமறைவாக இருந்து வந்தார்.

பியேறாவுடன் இணைந்து இனப் படுகொலைகளைப் புரிந்ததாகக் குற்றஞ்சாட்டப்பட்ட பொஸ்னிய, சேர்பிய இராணுவத்தின் உயரதிகாரியான ஜெனரல் றற்கோ மலடிக் இதுவரையில் தேடப்பட்டே வருகிறார்.

தனது குடும்பத்தின் நலன்களுக்காகவே பியேறா சரணடைந்துள்ளதாக சேர்பிய அரசாங்கம் தெரிவித்துள்ளது.





# அமெரிக்க தேர்தல் கருத்துக்கணிப்பில் ஹெரிக்கு பெண்கள் ஆதரவு அதிகரிப்பு





அமெரிக்க ஜனாதிபதித் தேர்தலில் - புஷ்ஷுக்கும், ஜனநாயக கட்சி வேட்பாளர் ஜோன் ஹெரிக்கும் இடையில் கடும் போட்டி நிலவுகிறது.

கடந்த 6 மற்றும் 7 ஆம் திகதிகளில் நடந்த கருத்துக்கணிப்பில் ஹெரிக்கு பெண்களின் ஆதரவு அதிகரித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

அமெரிக்காவில் அடுத்த மாதம் ஜனாதிபதித் தேர்தல் நடைபெறவுள்ளது. இரண்டாவது முறையாக புஷ் போட்டியிடுகிறார். அவரை எதிர்த்து ஜனநாயகக் கட்சி வேட்பாளர் ஜோன் ஹெரி களமிறங்கியுள்ளார். சுயேச்சையாக ரோல்ப் நடேர் என்பவர் போட்டியிடுகிறார்.

ஜனாதிபதித் தேர்தல் தொடர்பாக இதுவரை நடத்தப்பட்ட கருத்துக்கணிப்புகளில், அமெரிக்காவின் சில மாகாணங்களில் ஹெரிக்கு ஆதரவு இருப்பதும் மற்ற சில மாகாணங்களில் புஷ்ஷுக்கு ஆதரவு இருப்பதும் தெரியவந்தது.

அதிபர் புஷ் - ஹெரி நேரடியாக பங்கேற்ற முதல் விவாதம் கடந்த வாரம் நடந்தது. அந்த விவாதத்திற்கு முன்னதாக ரைம்ஸ் பத்திரிகை கருத்துக்கணிப்பு ஒன்றை நடத்தியது. அதில் ஜனநாயகக் கட்சி வேட்பாளர் ஹெரியைவிட ஜனாதிபதி புஷ் 6 புள்ளிகள் கூடுதலாகப் பெற்றிருந்தார்.

அதே நேரத்தில் புஷ்ஷுக்கு 43 சதவீத பெண்களும், ஹெரிக்கு 44 சதவீத பெண்களும் ஆதரவு தெரிவித்திருந்தனர். தற்போது நிலைமை தலைகீழாக மாறியுள்ளது.

புஷ்ஷுக்கு நிகராக ஹெரியின் செல்வாக்கு உயர்ந்துள்ளது. அதற்குப் பெண்களின் ஆதரவு பெருகியதே காரணம். கடந்த 6 மற்றும் 7 ஆம் திகதிகளில் நடந்த கருத்துக்கணிப்பில் -

புஷ்ஷுக்கு 38 சதவீத பெண்களும் ஹெரிக்கு 50 சதவீத பெண்களும் ஆதரவு தெரிவித்திருந்தனர். இதன மூலம் ஹெரிக்கு 12 சதவீத அளவிற்கு பெண்கள் மத்தியில் ஆதரவு அதிகரித்துள்ளது.

எனினும், தீவிரவாதத்தை ஒடுக்குவது, தீவிரவாதத்துக்கு எதிரான சர்வதேச போர் போன்ற விடயங்களில் ஹெரியைவிட புஷ் கூடுதல் புள்ளிகள் பெற்று முன்னிலையில் இருக்கிறார். அதேசமயம் அமெரிக்க பொருளாதாரத்தைக் கையாளும் விடயத்தில் புஷ்ஷை விட ஹெரியே முன்னிலை வகிக்கிறார்.

# ஈராக் கைதிகள் சித்திரவதை; இங்கிலாந்து வீரர் மீது வழக்கு

ஈராக்கிலுள்ள சிறைகளில் இங்கிலாந்து இராணுவத்தினர் சித்திரவதை செய்வது போலவும், நிர்வாணப்படுத்தி அவமானப்படுத்துவது போலவும் சமீபத்தில் புகைப்படங்கள் வெளியானது. இதுபற்றி இங்கிலாந்து அரசு விசாரணை நடத்தியது. இந்த விசாரணையில் கைதிகளை சித்திரவதை செய்த படங்கள் போலியானவை என்று தெரியவந்துள்ளது.

இந்தப் போலிப் படங்களைக் கொடுக்க ஏற்பாடு செய்த இங்கிலாந்து ராணுவ வீரர் ஸ்ருவர்ட் மக்கன்சி மீது நீதிமன்றில் வழக்குத் தொடரப்பட்டுள்ளது. இந்தப் புகைப்படங்களை வெளியிட்ட இங்கிலாந்து டெய்லி மிரர் ஆசிரியர் மீதும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

# இரண்டு சீன பொறியியலாளர் பாகிஸ்தானில் கடத்தப்பட்டனர்!

(கராச்சி)

பாகிஸ்தானில் உள்ள நீர் மின்சார உற்பத்தி நிலையத்தில் சீனாவைச் சேர்ந்த பொறியியலாளர்கள் பணியாற்றி வந்தனர். இந்த மின்சார நிலையம் ஆப்கானிஸ்தான் எல்லையோர மலைப்பகுதியில் இருக்கிறது.

இந்த நிலையில், நேற்றுமுன்தினம் 2 சீன பொறியியலாளர்களை ஒரு குழு கடத்திச் சென்றுவிட்டது.

சம்பவம் நடந்த இந்தப் பகுதி அல் - கொய்டா தீவிரவாதிகள் நடமாட்டம் மிகுந்த இடமாகும். எனவே, தீவிரவாதிகளே இந்தக் கடத்தல் சதியில் ஈடுபட்டிருக்கலாம் என்று சந்தேகிக்கப்படுகிறது. கடத்தப்பட்ட பொறியியலாளர்களின் பெயர் விபரம் உடனடியாகத் தெரியவில்லை.

கடத்தல் விவகாரத்தை பாகிஸ்தான் அதிகாரிகள் உறுதிசெய்ததுடன், இதுபற்றி விசாரணை நடப்பதாகவும் தெரிவித்தனர்.

## அமெரிக்க ராணுவ சிறையிலிருந்த

# ஈராக்கின் முன்னாள் பிரதமர் தாரிக் அஸீஸ் உயிரிழந்தார்?

ஈராக் முன்னாள் துணைப்பிரதமர் தாரிக் அஸீஸ் - அமெரிக்க சிறைக் காவலில் இறந்து விட்டதாக வெளியான தகவலை அமெரிக்க ராணுவம் மறுத்துள்ளது.

ஈராக்கில் சதாம் ஹுசைன் ஆட்சியின் போது துணைப்பிரதமராக இருந்தவர் தாரிக் அஸீஸ். போருக்குப் பின் அமெரிக்கா வெளியிட்ட முக்கிய குற்றவாளிகள் பட்டியலில் இவருடைய பெயர் 25ஆவது இடத்தில் இருந்தது.

சதாம் ஆட்சி கவிழ்ந்ததுமே அமெரிக்கப் படையிடம் அஸீஸ் சரணடைந்தார். சதாம், அஸீஸ் உள்ளிட்டோர் தற்போது அமெரிக்க ராணுவத்தின் கட்டுப்பாட்டிலுள்ள சிறையில் அடைக்கப்பட்டுள்ளனர்.

பாக்தாத் விமானநிலயத்தின் அருகே அவர்கள் அடைக்கப்பட்டிருப்பதாகக் கருதப்படுகிறது. அமெரிக்காவின் பாதுகாப்பிலிருந்த அஸீஸ இறந்து விட்டதாக அல் - அரேபியா தொலைக்காட்சி அறிவித்தது. இதனால் பரபரப்பு ஏற்பட்டது. ஈராக்கில் முகாமிட்டுள்ள அமெரிக்கப் படையின் - தகவல் தொடர்பாளர் பார்ரி ஜோன்சன் இதை மறுத்தார்.

அவர் அளித்த பேட்டியில் - தாரிக் அஸீஸ் இறக்கவில்லை. உயிருடன் இருக்கிறார். அவர் இறந்ததாக வெளியான தகவலில் உண்மையில்லை என்றார். ரோமில் தங்கியுள்ள அஸீஸின் மகன் ஷியாத்தும் தனது தந்தை உயிருடன் இருப்பதாகக் கூறியுள்ளார்.

நமது ஈழநாடு
The Namathu Eezhanadu
The Leading Daily of Tamils' Homeland

# ஊர்காவற்படையினரை விடுவிக்க காலக்கெடு இன்றுடன் முடிவு !

விடுதலைப் புலிகளின் தடுப்புக்காவலில் இருக்கும் இரண்டு ஊர்காவற்படையினரையும், விடுவிப்பதற்கு அரசாங்கத்துக்கு வடக்கு - கிழக்கு சிங்கள அமைப்பு விதித்திருந்த காலக்கெடு இன்றுடன் முடிவடையவுள்ளது.

இரண்டு ஊர்காவற்படையினரையும், புலிகளிடம் இருந்து மீட்க அரசு இன்றைக்குள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் இல்லையேல் தாம் வீதி மறியல் போராட்டங்களை மேற்கொள்ளபோவதாகவும் மேற்படி அமைப்பு எச்சரித்துள்ளது.

அத்துடன் திருகோணமலையிலுள்ள பிறிமா ஆலை டோக்கியோ சீமென்ற் ஆலை, இந்தியன் ஓயில் நிறுவனம் ஆகியவற்றின் விநியோகங்களைத் தடுத்துநிறுத்தப் போவதாகவும் வடக்கு - கிழக்கு சிங்கள அமைப்பு எச்சரிக்கை விடுத்திருந்தது.

இதேவேளை நேற்று 27 ஆவது நாளாகவும் ஊர்காவற்படையினரை விடுவிக்குமாறு உண்ணாவிரதப் போராட்டம் மணிக்கூட்டுக் கோபுரத்தருகே மேற்கொள்ளப்பட்டு வருவதும் குறிப்பிடத்தக்கது. (01)

# அக்கினிப் பறவைகள் ஒளிநாடா மாலதி நினைவு நிகழ்வில் அறிமுகம்




தமிழீழ விடுதலைப் புலிகளின் மகளிர் படையணியின் வெளியீடான அக்கினிப் பறவைகள் ஒளிநாடா அறிமுகவிழா நேற்று கோப்பாய் கந்தசுவாமி கோவிலில் இடம்பெற்றது.

கோப்பாய் கந்தசுவாமி கோவிலில் நேற்று மாலை 2 ஆம் லெப்டினன்ட் மாலதியின் நினைவுநாள் நிகழ்வு மற்றும் தமிழீழப் பெண்கள் எழுச்சிநாள் நிகழ்வும் நடைபெற்றன. இந்த நிகழ்வின் ஓர் அங்கமாகவே அக்கினிப் பறவைகள் ஒளிநாடா வெளியிட்டு வைக்கப்பட்டது.

தமிழீழ விடுதலைப் புலிகளின் மகளிர் பிரிவினரின் சாதனைகளையும், வீர வரலாற்றையும் சித்தரிக்கும் இந்த ஒளிநாடாவின் முதல்பிரதியை 2ஆம் லெப்டினன்ட் மாலதியின் தந்தையார் பெற்றுக்கொள்ள தமிழீழ விடுதலைப் புலிகளின் யாழ்.மாவட்ட கடற்புலிகளின் அரசியற்துறைத் துணைப் பொறுப்பாளர் வர்ணன் வழங்கினார். மற்றுமோர் முதல் பிரதியை மேஜர் சோதியாவின் தாயார் பெற்றுக்கொள்ள தென்மராட்சி கோட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் சிவநாதன் வழங்கினார்.

தொடர்ந்து சிறப்புப் பிரதிகளை யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சி.பத்மினி மற்றும யாழ். மாவட்ட அரசியற்துறை துணைப் பொறுப்பாளர் செம்மணன் ஆகியோர் வெளியிட்டு வைத்தனர்.

இந்த ஒளி நாடாவிற்கான மதிப்பீட்டுரையை வெளிச்சம் சஞ்சிகை ஆசிரியர் கருணாகரன் நிகழ்த்தினார்.

## புலிகள் முன்வைத்த...

அதனையடுத்து விடுதலைப் புலிகள் தமது யோசனையாக இடைக்கால தன்னாட்சி அதிகார சபை வரைபை சமர்ப்பித்திருந்தனர்.

ஆனால், விடுதலைப் புலிகளால் சமர்ப்பிக்கப்பட்ட இந்த யோசனையானது அரசாங்கம் சமர்ப்பித்த யோசனையுடன் ஒப்பிடுகையில் சமனானதாகக் கருதமுடியாது. இது தொடர்பாக விடுதலைப் புலிகளுடன் பேச்சு நடத்த எமது அரசாங்கம் முடிவுசெய்தது.

ஆனால், பேச்சுக்களை ஆரம்பிப்பது தொடர்பாக ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி தலைமையிலான அரசாங்கத்துக்குள்ளேயே பல கருத்து முரண்பாடுகள் உள்ளன.

பேச்சுவார்த்தை தொடர்பாக எமது ஆலோசனையை வழங்க நான் எந்நேரமும் தயாராகவே உள்ளேன். அத்துடன் பேச்சுக்களில் ஏற்படும் முரண்பாடுகளைத் தீர்க்கும் வகையிலேயே ஆலோசனைச்சபை அவசியமானதெனவும் அவர் தனது கடிதத்தில் மேலும் தெரிவித்துள்ளார்.

## சூழ்நிலைக்கேற்ப ராணுவத்தை...

அதில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது -

கடந்த 20 வருடங்களுக்கும் மேலாக நாம் பயங்கரவாதிகளின் நடவடிக்கைகளைக் கையாண்டு வருகிறோம். உலகில் இதுபோன்ற அனுபவத்தை வேறெந்த இராணுவமும் கொண்டிராது.

கடந்த இரண்டரை வருடங்களாக நோர்வேயின் அனுசரணையுடன் இடம்பெற்றுவரும் போர் நிறுத்த ஒப்பந்தத்தை முழுமையாகக் கடைப்பிடிப்பதையிட்டு நான் படையினருக்கு நன்றி கூறுகின்றேன்.

சமாதானச் செயற்பாடுகளை முன்னெடுத்துச் செல்லவேண்டுமெனில், இராணுவம் பலம்வாய்ந்ததாக நிலைநிறுத்தப்படவேண்டும். உயர்தரப் பயிற்சியே படையினரை உச்ச நிலையில் வைத்திருக்க உதவும்.

சமாதானத்தை ஏற்படுத்துவதற்காக இராணுவம் பல அர்ப்பணிப்புக்களைச் செய்துள்ளது. நாட்டின் பாதுகாப்பை உறுதிசெய்து சமாதானச் செயற்பாடுகளை முன்னெடுத்துச் செல்வதற்கு தேவையான உயர்ந்த பட்ச பங்களிப்பை வழங்குவது எமது பொறுப்பாகும்.

இதனை பலம்வாய்ந்த இராணுவம் என்ற வகையில்தான் எம்மால் நிறைவேற்ற முடியும். மாறுபடும் யுத்த சூழ்நிலைகளுக்கு ஏற்ப மென்மேலும் பலமடைவது அவசியமானதாகும். எனவே பயிற்சிகளைத் தொடர்ந்து மேற் கொள்ளவேண்டும்.

தமிழ் - சிங்கள மக்களிடையே சிறந்த தொடர்பாடல் இன்மையே வடக்கு - கிழக்கு யுத்தத்துக்கு பிரதான காரணமாகும். எனவே இந்த நிலைமையைப் போக்குவதற்கு இராணுவத்தினர் தமிழ்மொழியைக் கற்பதன் மூலம் சிறுபான்மைத் தமிழர்களுடனான உறவை வளர்க்கலாமெனத் தெரிவித்தார்.

## உணர்வெழுச்சியுடன்...

வப்படத்துக்கான மாலையை யாழ்.மாவட்ட மாணவர் அமைப்பு பொறுப்பாளர் எழிலன் அணிவித்தார்.

இதனைத் தொடர்ந்து க.வேதவல்லி தலைமையில் ஆரம்ப நிகழ்வுகள் நடைபெற்றன. இந்த நிகழ்வில் ஆயிரக்கணக்கான மக்கள் உணர்வெழுச்சியுடன் கலந்துகொண்டனர்.

இதேவேளை நேற்று யாழ். குடாநாட்டின் வீதிகள், கடைகள், பொதுநிறுவனங்கள் முன்பாகவும் சிவப்பு, மஞ்சள் கொடிகள் கட்டி தொங்கவிடப்பட்டு மாலதியின் நினைவுதினம் உணர்வெழுச்சியுடன் அனுஷ்டிக்கப்பட்டது.

இதேபோல் தமிழீழத்தின் பல பகுதிகளிலும் தமிழீழப் பெண்கள் தினம் மிகவும் சிறப்பான முறையில் அனுஷ்டிக்கப்பட்டது.

கிளிநொச்சி மாவட்டத்தில், கிளிநொச்சி மத்திய விளையாட்டரங்கில் இந்நிகழ்வுகள் நடைபெற்றன. காலை 9 மணிக்கு ஆரம்பமான இந்த நிகழ்வில் பெருந்திரளான மக்கள் கலந்துகொண்டதுடன், எழுச்சி உரைகளும் கலைநிகழ்வுகளும் இடம்பெற்றன.

மன்னார் - நானாட்டான் விளையாட்டரங்கிலும் ஆண்டான்குளம் விளையாட்டரங்கிலும், மட்டக்களப்பில் அரசடித்தீவு பொது மைதானத்திலும் திருகோணமலையில் சிறி சண்முகா இந்து மகளிர் கல்லூரியிலும் மாலதி நினைவுநாள் நிகழ்வுகள் நடைபெற்றன.

வவுனியா மாவட்டத்தில் பூந்தோட்டம் பொது மைதானத்தில் தமிழீழ பெண்கள் எழுச்சிநாள் நிகழ்வும் மாலதி நினைவுநாள் நிகழ்வும் இடம்பெற்றன.

முல்லைத்தீவின் புதுக்குடியிருப்பு, மூங்கிலாறு பிரதேசங்களிலும் தமிழீழ மகளிர் எழுச்சி நாளும், இரண்டாம் லெப்.மாலதியின் 17 ஆவது ஆண்டு நினைவுநாள் நிகழ்வுகளும் சிறப்பாக அனுஷ்டிக்கப்பட்டன.

## பலாலி..

சி.ஈ.சி.பி நிறுவனத்திடம் கையளிக்குமாறு ஜனாதிபதி சந்திரிகாவின் இந்த அனுமதியுடன் - இதுதொடர்பாக அமைச்சரவை அங்கீகாரமும் பெறப்பட்டிருக்கிறது என்பது குறிப்பிடத்தக்கது.

## மாலதியின் உருவ...

சியா, பொன்தியாகம், கவிஞரும் மாலதியின் சிலையை வடிவமைத்தவருமான கவிஞர் நாவண்ணன், கிளிநொச்சி மாவட்ட மகளிர் அரசியற்துறைப் பொறுப்பாளர் பூமகள், பொன்னம்மான் கண்ணிவெடிப்பிரிவு பொறுப்பாளர் அஸ்வினி, செஞ்சோலை சிறுவர் இல்ல மகளிர் பொறுப்பாளர் ஜனனி.

தமிழர் புனர்வாழ்வுக் கழக நிர்வாகப் பொறுப்பாளர் அமுதாப் ஆகியோர் மலர்மாலைகளை அணிவித்தனர்.

மலர் அஞ்சலி நிகழ்வினை கடற்புலிகளின் மகளிர் பிரிவு சிறப்புத்தளபதி விடுதலை ஆரம்பித்து வைத்தார்.

தொடர்ந்து தளபதிகள், போராளிகள், பொறுப்பாளர்கள், பொதுமக்கள் எனப் பலரும் மலர் அஞ்சலி செலுத்தினர்.

மாலதியின் உருவச்சிலையினை சிறப்பாக வடிவமைத்தமைக்காக கவிஞர் நாவண்ணனுக்கு தளபதி கேணல் ஜெயம் நினைவுப் பரிசு வழங்கினார்.

தொடர்ந்து தமிழீழ அரசியற்துறைப்பொறுப்பாளர் தமிழினி நினைவுரை ஆற்றினார்.

## ஜே.வி.பியினருடன் எந்தவித...

கூட்டத்தில் உரையாற்றும் போதே ஜனாதிபதி இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது -

ஜே.வி.பியுடனான உறவு சிநேகபூர்வமாகவும் ஆரோக்கியமாகவும் இருக்கின்றது. இத்தகைய தனிப்பட்ட சுயாதீன ஊடகங்கள் ஐக்கிய தேசியக் கட்சியில் நிலவும் உட்கட்சிப் பூசல்கள் பற்றிச் செய்திகள் எதையும் வெளியிடுவதில்லை.

நாடாளுமன்றத்தில் அரசாங்கத்தின் பெரும்பான்மை தற்போதுள்ள 116 ஆசனங்களிலிருந்து 124 ஆக விரைவில் அதிகரிக்கப்படவுள்ளது.

இந்தப் பெரும்பான்மையைப் பெற்று மக்களின் அபிலாஷைகளை பிரதிபலிக்கும் வகையில் தற்போதைய அரசியல் யாப்பு திருத்தி அமைக்கப்படும்.

இந்த அரசியல் யாப்பு திருத்தங்கள் சிறிய மற்றும் சிறுபான்மை அரசியல் கட்சிளுக்கு நீதியை வழங்கக்கூடியதாக இருக்கும்.

உலகசந்தையில் எரிபொருட்களின் விலை உயர்வடையும்போது நாட்டு மக்களுக்கு சலுகை வழங்குவது கடினமான விடயம். அவ்வாறு செய்தால் நாட்டில் பணவீக்க வீதம் மேலும் உயர்வடையும்.

அனைத்து சேவைகளையும் இலவசமாக மக்களுக்கு வழங்குவது எவ்வாறு? வேலைவாய்ப்பு, வீதி அமைத்தல் என்பன இலவசமாக செய்துக்கொடுக்கப்படுகின்றன.

அத்துடன் நீர்ப்பாசன முறைகள், கல்வி, சுகாதாரம் போன்றன இலவசமாகவே மக்களுக்கு வழங்கப்படுகின்றன. எனவே இவற்றை உபயோகித்து கல்வி, சுகாதாரம் என்பவற்றை மேம்படுத்திக்கொண்டு கல்வியினூடாக வேலைவாய்ப்பைப் பெற்றால் அதிகரிக்கும் பொருட்களின் விலைகளைச் செலுத்தத் தயாராக வேண்டும். இல்லையெனில் ஆண்டவனாலும் இதனைச் செய்யமுடியாது.

எனவே மேற்படி விடயங்களை அரசாங்கம் தொடர்ந்து இலவசமாக வழங்குமாக இருந்தால், இலவசமாக வழங்கப்படும் உணவு, நிவாரணம் என்பவற்றை நிறுத்துவோம்.

ஆனால், நாட்டில் வேலைவாய்ப்பின்றி வருமானம் இல்லாமல் இருப்பவர்களுக்கு வருமானத்தைப் பெற்றுக்கொடுக்கவேண்டிய அனைத்தையும் 1956 முதல் எமது அரசாங்கங்கள் செய்தன. இன்று நாமும் அவற்றைச் செய்யத் தயாராகவுள்ளோம்.

தனிப்பட்ட பிரச்சினைகளை முன்வைத்து நாட்டை நிர்வகிக்க முடியாது. பிரபாகரனோடு பேச்சு நடத்த ஒரு நிமிடம் முகத்தைக்கூட பார்க்க முடியாது.

எனக்கும் நாட்டுக்கும் செய்தவற்றை நினைத்தால் நாடொன்றை நிர்வகிக்க முடியாது. அவ்வாறானவர்கள் தலைவராகவும் முடியாது. தலைமை வகிப்பவர்கள் - கிராமம், மாவட்டம், மாகாணம் என்று பாராமல் - தனிப்பட்ட பிரச்சினைகளை மறந்து ஒன்றிணைந்து செயற்படும் நிலைக்கு நாம் வரவேண்டும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

தேசிய லொத்தர் சபை மஹஜன சம்பத பெறுபேறுகள்
சீட்டிழுப்பு இல:- 1655 திகதி:- 08.10.2004
வெற்றி இலக்கங்கள்
C 9 9 7 8 4 4
அடுத்த சுப்பர் பரிசு 349 லட்சத்துக்குமேல்

Compaq PIII கணனிகள் விற்பனைக்குண்டு
கனடாவிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட Compaq PIII கணனிகள் (Tower Model) 800MHz/550MHz, 128 Mb RAM, 10GB Hard Disk, CD ROM மல்டிமீடியா மற்றும் 17" Color Monitor உடன் அதிசயத்தக்க விலையில்விற்பனைக்குண்டு.
- புதிய P1 கணனிகள் மற்றும் புதிய பழைய உதிரிப் பாகங்கள் கொழும்பு விலையில்
- குறைந்த இருப்புக்களே கைவசம்
- ஏமாற்றத்தைத் தவிர்க்க முந்துங்கள்
க.உதயகுமார், சுகிர்த வாசா, கும்பிளாவளை, அளவெட்டி.
தொடர்பு : 0776093477 / 0712509228

பணிநிலை வெற்றிடம்
எமது நிறுவனத்தில் பின்வரும் பணிநிலைகளில் பணியாற்ற விரும்புவோர் அலுவலக நேரங்களில் நேரில் வரவும்.
☆ பக்க வடிவமைப்பாளர்
(Corel Draw, Photo Shop இலும் பணியாற்றக்கூடியவர்களாக இருத்தல் வேண்டும்)
☆ கணினித் தட்டெழுத்தாளர்
(தமிழில் Typing செய்யக்கூடியவர்களாக இருத்தல் வேண்டும்)
நிர்வாக இயக்குனர்
நமது ஈழநாடு

31 ஆம் நாள் நினைவஞ்சலி
மண்ணில் 13 08 1921

விண்ணில் 11 09 2004
அமரர் நாகமுத்து மார்க்கண்டு
எமது பாடசாலை ஆசிரியை செல்வி மீனலோசினி அவர்களின் அன்புத் தந்தையாரின் பிரிவால் வாடிநிற்கும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்வதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கிறோம்.
யா/உயரப்புலம்
மெ.மி.த்.க.பாடசாலை,
ஆனைக்கோட்டை. (சி-3255)
அதிபர், ஆசிரியர்கள்,
மாணவர்கள்.

இப்பத்திரிகை இல.267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள நமது ஈழநாடு அச்சகத்தில் 11.10.2004 அன்று பொன்னுத்துரை குருதேவ் அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பட்டது.